Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

விலை ரூபா 30.00
ஜூலை 2010
(ISSN 1800-2641)

"Registered in the Department of Posts of Sri Lanka under No. "QD/109/News/2010"

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ Fax No - 023-2251161, E. Mail : sdmlogu@gmail.com, benoalexander@yahoo.com

## திருப்பு முனை மையத்தின் முன்னெடுப்பில்

# மன்னார் நகரில் சமூக தீமைகள் ஒழிப்பு பேரணியும் பொது அமர்வும்

சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தினமாகிய மே 31. 2010 அன்று மன்னார் மறைமாவட்டத்தின் திருப்புமுனை (மது நோயாளர் புனர் வாழ்வு) மையத்தின் ஏற்பாட்டிலும் பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவிலும் சமூக தீமைகள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியும் பொது அமர்வும் இடம்பெற்றது.

அன்றைய நாளில் பி.ப 3.30 மணிக்கு பேரணியானது மன்னார் நகர புதிய பாலத்தில் ஆரம்பமாகி பேரூந்து தரிப்பிடத்தை வந்தடைந்து மன்னார், தாழ்வுபாடு வீதியூடாக நகர்ந்து பொது விளையாட்டு மைதானத்தை சென்றடைந்தது. சமூக தீமைகளுக்கு எதிரான பதாதைகள், சுலோகங்களை தாங்கியவாறு சமூக தீமைகளுக்கு எதிரான உணர்வுடைய சிறியோர், பெரியோர் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர். புகைத்தல், மதுபானம் இவற்றின் கெடுதிகளை சித்தரிக்கும் ஊர்திகளும் ஊர்வலத்தில் வலம் வந்தன. ஒலிபெருக்கியில் சமூக வன்முறைகளுக்கு, தீமைகளுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் கொடுக்கப்பட்டன.

மன்னார் பொது விளையாட்டுத் திடலை பேரணி வந்தடைந்ததும் பொது அமர்வு இடம்பெற்றது.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)





## இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா தினத்தில் மன்னார் பேராலய பங்கில் மாபெரும் நற்கருணை பேரணி

நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சியுமாகும் என்று விசுவாச அறிக்கையிடுகிறது வத்திக்கான் சங்க ஏடு(தி.11)"குருக்கள் இன்றேல் நற்கருணை இல்லை; நற்கருணை இன்றேல் திருச்சபை இல்லை" என்பது குருக்களுக்கான ஆண்டின் சுலோகங்களில் ஒன்று. நற்கருணை மட்டிலான ஆராதனையினதும் பக்தியினதும் வெளியடையாளமாக குருக்களுக்கான ஆண்டிலே பேராலயப் பங்கிலே 06.06.2010 ஞாயிற்றுக்கிழமை இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா தினத்தில் மாபெரும் நற்கருணைப் பேரணி நடாத்தப்பட்டது. (தொடர்ச்சி 10ம் பக்கம்)





## மருதமடுத் திருப்பதியில் ஆடித்திருவிழா

கானகத்து கன்னிகையே
மாந்தரெமதரசியே
தேடி வரும் பக்தர் எம்மை
ஏறெடுத்து பாருமே

வாடி நிற்கும் எமது இனம்
நாடி வரும் உமது சனம்
யாரிடம் நாம் செல்லுவோம் - எம்
சோகக் கதை சொல்லுவோம்

சுதந்திரம் எமக்கு வேண்டும்
சுபீட்சமும் நிலவ வேண்டும்
ஆண்டவனை கேளுமே
ஆறுதலின் தாய் நீயே!




மன்னா வாசகர் அனைவருக்கும் மருதமடு செபமாலை அன்னையின் ஆடி (2)த்திருவிழா நல்வாழ்த்துக்கள்!

## எண்பது வயது நிறைவில்

# அருள்தந்தை ஜே.பி. தேவராஜா அடிகளார்

உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களை உவந்தளிக்கின்றோம்.








எமது மறைமாவட்டத்தின் மூத்த குருவாகிய அருட்பணி. ஜே.பி. தேவராஜா அடிகளார் கடந்த 16.06.2010 புதன் கிழமை அன்று தனது அகவையில் எண்பதினை எட்டியுள்ளார். அருட்தந்தை அவர்கள் 80 வயது நிறைவில் நன்றித்திருப்பலியை மருதமடுத் திருத்தலத்திலும் தனது பிறந்தகமாகிய வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்திலும் ஒப்புக்கொடுத்தார். மறைமாவட்டத்தில் பணிபுரியும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகளின் வாழ்த்துகளுடன் யாழ். மறைமாவட்ட 18 குருக்கள் வவுனியாவில் நிறைவேற்றப்பட்ட நன்றித்திருப்பலியில் இணைந்து செபித்து மூத்தகுருவிற்கு தங்கள் வாழ்த்துக்களை வழங்கினார்கள். அருட்தந்தை அவர்கள் எமது மறைமாவட்டம் யாழ் மறை மாவட்டத்தோடு இணைந்திருந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் பல கடினமான பணித்தளங்களிலும் எமது மறைமாவட்டத்தின் பல பங்குகளிலும் அமைப்புகளிலும் தேசிய கறிற்றாஸ் - டெசேக் கத்தோலிக்க நிறுவனத்தின் இயக்குனராகவும் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

"எங்கள் வாழ்நாள் எழுபது ஆண்டுகள், வலிமை மிகுந்தோருக்கு எண்பது" என்கிறது திருப்பாடல் (9:10). ஆண்டவர் இவருக்கு அளித்த உடல், உள, ஆன்மீக நலனிற்காகவும் வலிமைக்காகவும் இறைவனுக்கு நன்றியுரைப்பதுடன் அன்பும் பாசமும் மரியாதையும் நிறைந்த அருள்தந்தை இவரை ஆண்டவர் அளவிலா நலன்களால் நிறைக்க இறையாசீர் வேண்டுகின்றோம்.

## கணனி பயிற்சி நெறியில் மறைமாவட்டக் குருக்கள் சிலர்

### திருத்தந்தையின் 44வது உலக தொடர்பாடல் தின செய்தியின் பிரதிபலிப்பு

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்களில் 15பேர் குறுகிய கால கணனி பயிற்சி வகுப்புகளில் பங்கெடுத்து பயன்பெற்றனர். இந்திய தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த இயேசு சபைக்குரு அருட்பணி. வீனோ பர்ன் சே.ச அவர்கள் இவ்வகுப்புகளை மன்னார் ஆயர் இல்லத்தில் நடத்தினார். 3 வாரம் நடைபெற்ற கணனியின் பவர் பொயின்ட் (Power Point) பாடநெறியினை குருக்கள் சிலர் ஆர்வமாய் கற்றுத்தேறினர். மேய்ப்புப்பணியில் டிஜிரல் தொடர்பாடல் கருவிகளை பயன்படுத்த தனது 44வது உலக தொடர்பாடல் தினச் செய்தியில் அறைகூவல் விடுத்த திருத்தந்தையின் அழைப்பினை செயல்முறைப்படுத்தும் ஆயத்தத்தில் இவ்வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.







# மன்னா

## மனப்பொழிவு
## ஆசிரியர் குழு பகர்வு



# வாசகர் எண்ணங்கள்



## சமூக தீமைகளை வேரறுக்க முன்வருவோமா?

வைகாசி மாதம் 31ம் திகதி சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தினமன்று மன்னார் மறைமாவட்ட திருப்பு முனை நிலையத்தின் முன்னெடுப்பில் சமூக தீமைகளுக்கு எதிரான பேரணியும் நிகழ்வுகளும் மன்னார் நகரில் முன்னெடுக்கப்பட்டன. இவ்விடயம் சமூக நலன் விரும்பிகள், சமூக முன்னேற்ற ஆர்வலர்களின் பாராட்டைப் பெற்ற விடயம். மன்னார் மறைமாவட்ட ஆயரும் மன்னார் மாவட்ட நீதவான், அரசாங்க அதிபர் போன்றோரும் இந்த முன்னெடுப்பையும் முன்னின்று செயற்படுத்திய அருட்பணி. வின்சன்ட் பற்றிக் அ.ம.தி அவர்களையும் பாராட்டிநின்றனர். நடைபெற்று முடிந்த அந்நிகழ்வில் பங்கேற்று சமூக தீமைகளுக்கு எதிர்ப்புணர்வை வன்முறையற்ற அமைதி வழியில் அழுத்தமாக பதிவு செய்ய மக்களுக்கு பங்குக் குருக்கள் வழியாகவும் மன்னார் நகரில் ஒலி பெருக்கி வழியாகவும் விடுக்கப்பட்ட அழைப்பு பலரால் புறக்கணிக்கப்பட்ட நிலையையே அவதானிக்க முடிந்தது. ஏனெனில் இந்நிகழ்வுக்கு பெரும்பாலும் பாடசாலை மாணாக்கரும் அதிலும் அனேக மாணவிகளும், பெண்களும் குறைந்த பட்ச ஆண்களுமே பங்கேற்றிருந்தனர். சமூக தீமைகளுக்கு எதிரான ஊர்வலம் மன்னார் நகர வீதிகள் வழியே நகர்ந்து வந்த போது வேடிக்கை பார்த்து சிரித்து நின்றவர்கள் அனேகர். ஊர்வலத்தில் இணைந்து கொள்ள அழைப்பு விடுக்க பராமுகமாய் சென்றோரும் அனேகர். தானுண்டு, தன் வேலை உண்டு என்ற தன்னல-வாதிகளின் அழுக்கு படிமங்களாய் மாறிவருகின்றது சமூதாயம் என்பது மிகவும் கவலைக்குரிய விடயம். "என்னை எப் பிரச்சினையும் நேரிடையாக பாதிக்காவிட்டால் சரி யாரும் எக்கேடுகெட்டால் எனக்கென்ன?" என்று ஒதுங்கி இருக்கும் நிலை சமூக நலனுக்கு ஆரோக்கியமானதல்ல. ஒவ்வொருவரும் சமூகத்தில் தானும் ஓர் அங்கம் என உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

முள்ளிவாய்க்காலோடு ஆயுத மோதல் முடிவுக்கு வந்த ஓராண்டில் நாட்டில் படுகொலைகள் குறைந்துள்ளது என்று சொல்லப்பட்டாலும் தமிழர் எம் பிரதேசங்களில் கடத்தல் முயற்சிகள், களவு கொள்ளைகள் சடுதியாக அதிகரித்து அடக்கப்பட்டன. சமூக தீமைகளுக்கு எதிரான எங்களுடைய விழிப்புணர்வுகளை, செயற்பாடுகளை துணிந்து வெளிக்காட்டாவிடில் உறங்குநிலை தீமைகள் எரிமலையாகி எம்மை பொசுக்கிவிடும். எனவே சமூகம் மட்டிலான அக்கறையையும் பொதுநலனையும் அதிகரித்து கொள்வோம். வீட்டு வன்முறை, பெண்களுக்கு எதிரான வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம், பொதுவிடத்தில் புகைத்தல், மது அருந்துதல், சட்ட விரோத மது விற்பனை, களவு, கொள்ளை, கடத்தல் இவைபோன்ற சமூக தீமைகளுக்கு எதிராக காத்திரமாக குரல் கொடுத்து செயற்பட முன்வருவோம். நீதியும் சட்ட ஒழுங்கும் எம் பிரதேசத்தில் நிலைபெற கரம் கோர்ப்போம். சமூகத்திற்கு எதிராக தீமைகள் புரிவோரை அடையாளம் கண்டு அவர்களை திருத்தி தீமைகளை ஒழிக்க முனைவோம். திருந்த மனமில்லாத இரும்பு உள்ளங்களை நீதிக்கு முன் துணிந்து நிறுத்துவோம். சமூக தீமைகளுக்கு எதிராகவும் குறிப்பாக மது போதைகளுக்கு அடிமையானவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் மகத்தான பணியாற்றும் திருப்பு முனை மைய செயற்பாடுகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுத்து எம் சமூகங்களிலிருந்து தீமைகளை வேரறுக்க முன் வருவோமா?

## மன்னாவின் பணி வளரட்டும்

மாதம் ஒரு முறை மலரும் மன்னாவே உன்னை மனதார வாழ்த்துகின்றேன். நீயோ சுமந்து வரும் ஒவ்வொரு ஆக்கங்களும் அருமையிலும் அருமை. பல தெவிட்டாத அம்சங்களை தேன் போல் தித்திக்க வைக்கின்றாய். மன்னாவிடம் ஒரு விண்ணப்பம் காலம் தாழ்த்தி வருவதால் உரிய போட்டியில் குறிப்பிட்ட திகதியில் பங்கெடுக்க முடியாதுள்ளது. காலம் தாழ்த்தாது உரிய நேரத்தில் மன்னாப் பத்திரிகை கிடைக்கச் செய்யும்படி தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்.

ப. வதனா,
வாழ்க்கைப் பெற்றான் கண்டல்,
நானாட்டான்.

## அப்பாடா!

இப்போ தான் மன்னாவே நான் பெருமூச்சு விடுகிறேன். ஏன் தெரியுமா? ஒவ்வொரு மாதமும் உன் வரவை வழிமேல் விழி வைத்து காத்திருக்கும் நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக உன்னை என் கண்களால் காணவில்லை. காரணம் இருக்க இடமில்லை. உன் இதழை வாசிக்க நேரமில்லை. இப்படியே பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்து இப்போ சொந்த இடத்தில் இருந்து ஏப்ரல் மன்னாவை கண்டது என் மனதில் அளவற்ற மகிழ்ச்சி. இனி நான் என் மன்னாவோடு என்றும். உன் இதழில் என் ஆக்கம் வர இப்போ என் பேனாவையும், தாளையும் எடுக்கின்றேன்.

உன் வாசகி : ஆனந்த செல்வி, திருச்சிலுவை
கன்னியர் மடம், பரந்தன், கிளிநொச்சி.

## ஆன்மீக புறாவாக பரந்து செல்கின்றது



மன்னார் மறைமாவட்ட கிறிஸ்தவ மக்களாகிய எமது உள்ளங்களை மனமாற்ற இல்லங்களுக்கு மாதம் ஒரு மலர் விரித்து மணம் வீசும் மன்னாவே! உன்னை மலரினாலும், தீபத்தாலும் தூபத்தாலும், வாழ்த்துகின்றேன். நீ கரங்களுக்கு கிடைத்தவுடன் என்ன குடும்பவேலை கிடந்தாலும் அதை ஒரு புறம் போட்டுவிட்டு உன்னை வாசித்து மகிழ்வேன். நீ அள்ளித்தரும் அனைத்து தலைப்புகளுக்கும் நன்றிகள் பல. முக்கியமாக குருக்களின் ஆண்டு, குருத்துவப் பொழிவு, கட்டுரை, எனது மனதை முற்றுமுழுதாக கவர்ந்தது. நீ அள்ளித்தரும் அனைத்து பங்குத்தளச் செய்திகள், சிறுவர் பொழிவு, விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி, மாதம் ஒரு புனிதரை அறிந்துகொள்வோம், அனைத்தும் அருமையாக உள்ளது, வாசிக்க மிகவும் சந்தோசமாக உள்ளது. மாதம் ஒரு மன்னாவை தொடர்ந்தும் வாசித்து மனமாறி எம் கிராமத்தில் குருக்கள் பெருக வேண்டுகிறேன். மாதமொரு மன்னா வெளிவர வாழ்த்துகிறேன்.

ஜே. ஜெனிற்றா, முருங்கன்பிட்டி, முருங்கன்.

## கருத்துக் களம்

கருத்துக்களப் பகுதியில் இடம்பெறும் கருத்துக்கள் மன்னாவின் கருத்துக்கள் அல்ல. கருத்துகளுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே! நீங்களும் உங்கள் கருத்துகளை ஆதரித்தோ மறுத்தோ எழுதலாம். (பதிப்பாசிரியர்).

## குடும்ப நல்லுறவில் ஆண்களின் பங்கு

குடும்ப வாழ்வு சிறக்க வேண்டும் என்றால் ஆண், பெண் ஒற்றுமை அங்கே திகழ வேண்டும். ஒற்றுமை உறவு நிலைத்திருக்க வேண்டும் என்றால் விட்டுக் கொடுப்புடன் கூடிய அன்பின்மேல் அந்த வாழ்வு கட்டியெழுப்பப்பட வேண்டும். கணவன், மனைவி உறவு இதில் பிரதானமானது. ஒவ்வொரு குடும்பத்திலும் அன்பின் வாழ்வு நிறைந்தால் அந்தக் கிராமம் அந்தச் சமூகம் நிமிரும் வளரும். எத்தனையோ கிறிஸ்தவ குடும்பங்களில் கூட அதட்டல்கள் மிரட்டல்களுடனே பெண்கள் வாழ நிர்பந்திக்கப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் பெண்களின் நியாயத் தன்மைகளைக் கூட கணவன் சீர்தூக்கிப் பார்ப்பதில்லை.

பெண்கள் என்றால் வீட்டில் உள்ள ஆண்களுக்கு பணிய வேண்டும் என்ற கடும் போக்கில் சில வீடுகளில் அன்னையர்கள் கூட, வளர்ந்த ஆண் பிள்ளைகளால் அடக்கப்படுகின்றனர். அவர்களின் உணர்வுகள் தேவைகள் நியாயமற்ற முறையில் தடுக்கப்படுகின்றன. வீட்டில் உள்ள அனைத்து வேலைகளும் அவ் வீட்டில் உள்ள பெண்கள் மேலேயே சுமத்தப்படுகின்றன. ஆனால் ஓர் ஆண் செய்யும் வேலையை விட பெருமளவான வேலைகளை ஒரு பெண் சகிப்புத்தன்மை, பொறுமை என்பவற்றுடன் செய்து முடிக்கிறாள். அப்படியிருந்தும் வீட்டில் மதிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுகிறாள் பெண். தந்தையர்கள் சிந்திக்க வேண்டும்.

தற்போதைய பொருளாதார நிலையில் வேலைக்குச் செல்லும் மனைவியரும் உள்ளனர். இவர்கள் வேலை முடிந்துவந்து களைப்பு மாறாமலே வீட்டு வேலைகளையும் கவனித்தாக வேண்டும். ஆனால் கணவன் ஓய்வாக நண்பர்களுடன் பொழுது போக்கிக் கொண்டிருப்பார். ஏன், அந்த வீட்டு வேலைகளில் மனைவியுடன் பங்கு கொண்டு பொழுதைப் போக்கலாமே. அப்போது அன்பு,, பாசம் அங்கேயும் ஆரம்பிக்கும் அல்லவா இருவரும் உள்ளக்கிடக்கைகளைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பாகும். அன்பும் இரக்கமும் விட்டுக் கொடுக்கும் பண்பும் கொண்டவர்களே பெண்கள்.

மாதா, பிதா, குரு, தெய்வம் இந்த வரிசையில் கூட அன்னைதான் முழுதாயும், முதலாயும் நம் ஒவ்வொருவருக்கும் தெரிகின்றாள். என் மனைவி என் பிள்ளைகளுக்கு அன்னை தானே. ஒவ்வொரு பெண்ணும் அன்னையின் மறுவடிவங்களே. அவர்களின் நியாயமான அபிலாசைகளை அடக்கு முறையால் நசுக்காமல் முடிந்தவரை விட்டுக் கொடுக்க வேண்டும். தந்தையர் பிள்ளைகளின் முன்னால் மனைவியை அடக்குவது, கண்டிப்பது, நியாயமானவைகளைக் கூட கதைக்க விடாமல் அதட்டுவது தவிர்க்கப்பட வேண்டும்.

பிள்ளைகளுக்கும் அயலவருக்கும் முன் மாதிரியாக நடக்க, செயல்பட தந்தை முன்வர வேண்டும். ஒரு சில குடும்பங்களில் இந்த அன்பின் அடிப்படையான வாழ்வு காணப்படுகிறது. பெருமளவான தந்தையர்கள் மனைவியை பெண்பிள்ளைகளை அடங்கி ஒடுங்கி வாழ நிர்பந்திக்கின்றனர். கண்டிப்பு தேவை என்பதற்காக நியாயமானவைகளை சீர் தூக்கிப் பார்க்காதிருக்க முடியாது. எத்தனையோ பெண்கள் மனம் புழுங்கி, மனம் வெதும்பி வாழ்வைக் கழிக்கின்றனர். (திருப்பி அடிக்க மாட்டாள் என்பதாலோ) பெண்களைக் கைநீட்டி அடிப்பவர்கள் அன்பைப் பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டும். அன்னையின் வடிவமான பெண்களை மதித்து குடும்ப நல்லுறவின் மூலம் சமூதாய நல்லுறவை மிளிரச் செய்வோம்.

அ. யூ. உதயசேகரம் (ஆதவன்)
மத்திய கல்லூரி, ஓமந்தை.

## பெரியகட்டு புனித அந்தோனியார் திருத்தலத்திற்கு திருப்பயணமாகுங்கள்

- பங்குத்தந்தையர், பங்குமக்கள், செட்டிகுளம்.



கோடி அற்புதர் பதுவை நகர் புனிதர் அந்தோனியாரின் நாமத்தில் அமைந்துள்ள பெரியகட்டு திருத்தலத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 23.07.2010 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. நவநாட்களில் வழிபாடுகள் பி.ப 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி திருப்பலி ஒப்புக்-கொடுக்கப்படும். இத்திருத்தலத்தின் திருவிழா திருப்பலி 01. 08. 2010 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.30மணிக்கு எமது ஆயர் பேரருட்திரு. கலாநிதி இராயப்பு யோசேப்பு அவர்கள் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக நிறைவேற்றப்படும். அனைவரும் அணிதிரண்டு வருவீர்! புனித அந்தோனியார் பரிந்துரையால் இறையாசீர் நிறைவாய் பெறுவீர்!

## கறுப்பு யூலை



கறுப்பு யூலையும் வந்ததோ
27 வருடங்களும் ஆனதோ?
அன்று அரசு சிரித்தது
தமிழன் அழுவதை கண்டு

இன்று 27 வருடங்கள் ஆகியும்
எமது அழுகை ஓய்ந்ததுவா?
பின்னைய எத்தனையோ யூலைகள்
கறுப்பு யூலையின் கனதி விளம்பிற்று

எம்மை போராட வைத்தது
83 கறுப்பு யூலைதான்.
இனிய விடுதலை கீதங்களை இசைத்து ரசிக்க
எத்தனை முறை பிச்சை கேட்டு சலித்தோம்
பிச்சைச் கார அரசிடம்

ஒப்பந்தம் என்று எத்தனை தடவை
நற்செய்தி கூறியது
எதிர்ப்புக்கள் தொலைய
தொடர்ந்தவை கறுப்பு யூலைகள் தான்

முடிவற்று நீண்டு கொண்டே போகும்
பல யூலைகள்
எம் விடியல்
மிக தொலைவில் உள்ளது.

மா. இருதயராஜ் வாஸ்,
முள்ளிக்குளம்.

## மன்னார் மறைமாவட்ட / பங்குத்தளச் செய்திகள்

# பிரான்ஸ் நாட்டில் இயங்கும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு

தகவல் : N.M. ஜெயரட்ணம், மன்னா தொடர்பாளர், பிரான்ஸ்.

பிரான்ஸ் நாட்டில் செயலாற்றும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு அதனது தோற்றத்தின் நான்கு ஆண்டுகளை பூர்த்தி செய்யும் தினத்தை கடந்த 25.04.2010 ஞாயிறன்று மிக மகிழ்வுடன் கோலாகலமாகக் கொண்டாடியது.

அன்றைய தின விழாவை அருட்பணி. பிலிப் அடிகளார் ஒளியேற்றி ஆசியுரை வழங்கி ஆரம்பித்து வைக்க, மன்னார் மண்ணின் மைந்தரும் ஆன்மீக பணியக இயக்குனருமாகிய அருட்பணி. லீனஸ் சோசை அ.ம.தி. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.



இவ்வமைப்பானது அருட்பணி. பெனோ அலெக்சாண்டர் அவர்களால் 01.05.2006 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டு கடந்த நான்கு ஆண்டுகளாக அரும்பணியாற்றி வருகின்றது. தற்போது மன்னார் மாவட்டத்தில் எவ்வித அடிப்படை வசதிகளற்ற 25 இளம் மாணவ மாணவிகளின் பல்கலைக்கழகம் வரையிலான கல்வி வளர்ச்சிக்கு மன்னார் 'கறிற்றாஸ் - வாழ்வுதயம்" மூலமாக நிதி உதவிகள் புரிந்து வருகின்றது. இச் செயற்பாடானது இன மத பேதமற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னார் மக்களினதும், புலம் பெயர்ந்த மக்களினதும் நல் வரவேற்பை பெற்று இயங்கும் இவ்வமைப்பு இன்னும் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க அனைத்து மன்னார் மக்களின் பூரண ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றார் இவ்வமைப்பின் தலைவர் திரு. ரொனி சந்தாம்பிள்ளை அவர்கள்.

# மளுவராயர் கட்டையடம்பன் புனித செபமாலை மாதா ஆலய நேர்ந்தளிப்பு விழா

தகவல் :- திருமதி அகிலா, மளுவராயர் கட்டையடம்பன்.

கற்கிடந்த குளம் பங்கின் கட்டையடம்பன் கிராம புனித செபமாலை மாதா புதிய ஆலயத்தின் நேர்ந்தளிப்பு விழாவும் ஆலய திருவிழாவும் கடந்த 02.05.2010 அன்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. எமது ஆயர் பேரருட் கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களும் வருகை தந்திருந்த பிரமுகர்களும் பேண்ட் வாத்திய இசைக்கருவி முழங்க வரவேற்கப்பட்டனர். ஆயர் அவர்கள் புதிய ஆலயத்தை திறந்து வைத்து ஆசீர்வதிக்க அவர் தலைமையில் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இவ்வாலய மக்கள் பல தடவைகள் இடப் பெயர்வுகளை சந்தித்து அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டு எம் ஆயரின் பெருமுயற்சி யால் மீள்குடியமர்த்தப்பட்டவர்கள். தற்பொழுது வாழ்வுதயத்தின் அனுசரணையினால் வழங்கப்பட்டுள்ள வீடுகளிலே வசித்து வருகின்றார்கள். புதியதொரு ஆலயம் தேவை என்பதை உணர்ந்த இம் மக்கள், ஆயரின் ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்று முன்னைய பங்குத்தந்தை அருட்பணி டெஸ்மன் குலாஸ், தற்போதய பங்குத்தந்தை அருட்பணி. சீமான் மரியாதாசன் இவர்களின் அயராத உழைப்பினால் இவ்வாலயத்தை கட்டி முடித்துள்ளனர். இவ்வாலய கட்டுமானப் பணிக்கு உதவிபுரிந்த அனைவரையும் நன்றியோடு நினைவுகூருகின்றோம்.





# வங்காலை பங்கில் முதல்நன்மை கொண்டாட்டமும் நற்கருணை பேரணியும்

தகவல்: திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட், வங்காலை.

கடந்த 06.06.2010 ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா அன்று வங்காலைப் பங்கின் 63 சிறார்களுக்கு முதல்நன்மை வழங்கப்பட்டது. இப்பெருவிழா திருப்பலிக்கு சமூகத் தொடர்பு அருட்பணி மைய இயக்குனர் அருட்பணி. அலெக்சாண்டர் சில்வா (பெனோ) அவர்கள் தலைமை தாங்க உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. றொக்சன் குருஸ், அருட்பணி. கமால், அருட்பணி. வின்சென்ற் CMF ஆகியோர் இணைந்து கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினார்கள். அன்று மாலை நான்கு மணியளவில் ஊரைச்சுற்றி நற்கருணைப் பேரணி இடம்பெற்றது. அலங்கரிக்கப்பட்ட வீதிவழியே மக்கள் அணிவகுத்துச் செல்ல முதல் நன்மை பெற்றுக்கொண்ட சிறார்கள் நற்கருணை தாங்கிய தேருக்கு முன்பாக பவனி வந்தார்கள். பாடசாலைச் சந்தி, கடற்கரை, சந்தை ஆகிய இடங்களில் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி. அருள்ராஜ் குருஸ், ஞானோதய இயக்குனர் அருட்பணி. ஜெறோம் லெம்பேட் அ.ம.தி, கிளரேசியன் சபை குரு அருட்பணி. வின்சென்ற் ஆகியோர் முறையே 'நற்கருணை அன்பின் உறவு', 'நற்கருணை முழு மனித வாழ்வின் சின்னம்', 'நற்கருணை இறை-பிரசன்னத்தின் உடன் பயணிப்பு' எனும் தலைப்புகளில் மறையுரையாற்றினர். ஈற்றில் ஆலய முகப்பு மண்டபத்தில் குரு முதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அவர்களால் மறையுரையும் நற்கருணை ஆசீரும் வழங்கப்பட்டது. இந் நற்கருணைப் பேரணியை தலைமை தாங்கி நடாத்திய உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. றொக்சன் குருஸ் இந்நிகழ்வு அனைத்தும் செம்மையுற காரணமான அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## ஆணைக்குழுக்களின் குறிப்பேட்டிலிருந்து....

### பொதுநிலையினர் குடும்பப்பணி ஆணைக்குழு

# பெரியமடு ஈச்சளவக்கை மக்களை சந்தித்த புனித வின்சன்டி போல் மத்திய சபையினர்

தகவல் : P. இராயப்பு, தலைவர், விடத்தல் தீவு (புனித வின்சன்டிபோல் பக்தி சபை)

மன்னார் மறைமாவட்ட புனித வின்சென்டி போல் மத்திய சபை நிர்வாக உறுப்பினர் அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட பெரியமடு ஈச்சளவக்கை கிராம மக்களை கடந்த வைகாசி 23ம் திகதி சந்தித்து உரையாடி அவர்கள் துன்பதுயரங்களை கேட்டறிந்தனர். இக்குடும்ப சந்திப்பில் இயக்குனர் அருட்பணி அந்தோனி செபமாலை அடிகள் தலைமையில் திருமதி A. ஆபிரகாம் சோசை, திருமதி P. கிறிஸ்பி குருஸ், திரு S. எட்வேட், திரு.P.இராயப்பு, திருமதி மெற்றில்டா அமிர்தநாதன் லெம்பேட் ஆகியோர் ஈடுபட்டனர். இப்பகுதி வாழ் மக்கள் தாங்கள் அனுபவித்த சொல்லொணா துன்பதுயரங்களையும் பொருளாதார ரீதியில் தங்களது முற்று முழுதான இழப்பையும் எடுத்துக் கூறியதோடு புனித வின்சன்டி போல் மத்திய சபையினரின் இல்ல சந்திப்பால் தாங்கள் மகிழ்ச்சியடைந்துள்ள-தையும் எடுத்துரைத்தனர். இவர்கள் தற்போது கூடாரங்களிலும், தகரகொட்டில்களிலும், உடைந்த வீடுகளிலும் வாழத் தொடங்கியுள்ளனர். கணவனை இழந்த மனைவியர் பிள்ளைகளுடன் போதிய உதவியின்றி தவிக்கின்றனர். இம் மக்கள் ஞாயிறு திருப்பலி மற்றும் ஆன்மீக பணிகளில் ஆர்வமாய் ஈடுபடுவதை காணமுடிகிறது.

### அன்பிய ஆணைக்குழு

# பங்குகளில் அன்பிய வார நிகழ்வுகள்

தகவல் : திரு. ஞானப்பிரகாசம் (செயலர்) அன்பிய தொடர்பகம், மன்னார்.

மன்னார் மறைமாவட்டப் பங்குகளில் அன்பிய வாரம் 23 - 30, வைகாசி 2010 காலப்பகுதியில் கடைப்பிடிக்கப்பட்டது. தூய ஆவி பெருவிழாவில் மறைமாவட்ட அன்பிய கொடியேற்றத்துடன் தொடங்கியது அன்பிய வாரம். மூவொரு இறைவன் பெருவிழா அன்பிய தினமாக மறைமாவட்டப் பங்குகளில் நடைமுறைப்-படுத்தப்பட்டது. ஒரு சில பங்குகள் தமது வசதிக்கேற்ப பிறிதொரு நாளில் அன்பிய தினத்தை கொண்டாடினர். அன்பிய வாரத்தில் குறிப்பிட்ட சில பங்குகள் தினமும் மாலை வேளை அன்பியங்களாய் ஒன்றுகூடி பல செயற்பாடுகளை முன்னெடுத்தனர். அன்பிய கலை நிகழ்வுகளும் உணவுப் பகிர்வும் இடம்பெற்றன. பல பங்குகளில் அன்பிய குழுமங்கள் மீண்டும் தங்களைப் புதுப்பித்துக் கொண்டு செயலூக்கம் பெற அன்பிய வார முயற்சிகள் பயனளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பேராலயப் பங்கில்



தலைமன்னார் பங்கில்



விடத்தல்தீவு பங்கில்

### மறைக் கல்வி ஆணைக்குழு

# மறையாசிரியர் 1ம், 2ம் தேர்வில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா



மன்னார் மறைக்கல்வி நடுநிலையத்தில் கடந்த 19.06.2010 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் நற்கருணை (எழுந்தேற்ற) ஆராதனை வழிபாட்டுடன் இவ்விழா ஆரம்பமானது. மறையாசிரியர் 1ம் தேர்வும், மறையாசிரியர் சிறப்புத்தேர்வும் எழுதி சித்தியடைந்த மறைவாழ்வுப் பணியாளர்களையும், பிரதம விருந்தினராக வருகை தந்த சிறிய குருமட அதிபர், அருட்தந்தை சேவியர் குரூஸ் அவர்களையும், மறைக்கல்வி இயக்குனர். அருட்தந்தை. ம. ஜெயபாலன், ஆசிரியர் திருமதி இமல்டா, ஆசிரியர் திருமதி ஜெனிவி ஆகியோரையும் நிரந்தர மறையாசிரியர் திரு. செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் மகிழ்வுடன் வரவேற்றார். ஆசிரியர் திருமதி இமல்டா அவர்கள் தனது உரையில் மறைக்கல்வி பணியாளர்கள் தமது வாழ்வு மூலம் கிறீஸ்துவை சிறார்களுக்கு சான்றுபகர தியாகத்துடன் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என கூறினார். மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. ம. ஜெயபாலன் அவர்கள் மறைவாழ்வுப் பணியாளர் தமது பங்குகளில் பொறுப்புள்ளவர்களாக சிறுவர்களை இயேசுவின் வழியில் பயணிக்க வழிகாட்டுபவர்களாகவும் பொதுப்பணிகளில் சிறப்பான பங்களிப்பு செலுத்துபவர்களாகவும் அமைய வேண்டும் என்று அறிவுறுத்தி சித்தியடைந்தவர்களுக்கு தமது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் கூறினார். சிறிய குருமட அதிபர் அருட்தந்தை சேவியர் குரூஸ் அவர்கள் தமது சிறப்புரையில் மறைவாழ்வுப் பணியாளர்கள் தம் வாழ்வால் உலகிற்கு உப்பாக, ஒளியாக துலங்க வேண்டும் என்றும் சிறார்களின் வாழ்வில் முழு அக்கறை கொள்ளுவதன் மூலம் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் எனவும் கூறினார். மேலும் அவர் தமது உரையில் பல அப்போஸ்தலிக்க பணிகளுக்கிடையில் "மறைக்கல்விப்பணி" மிகவும் முக்கியமானது. ஆகவே மறை-யாசிரியர்கள் அதன் அவசியத்தை உணர்ந்து தம்மை நாளாந்தம் உருவாக்கிக் கொண்டு முழு ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். தொடர்ந்து சித்தியடைந்தோர் யாவருக்கும் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார். இறுதியாக நிகழ்வின் நெறிப்படுத்துனர் நிரந்தர மறையாசிரியர் மரிய செல்வன் அவர்கள் நன்றியுரை வழங்கினார். மதியவிருந்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

தகவல் : அருட்சகோதரி ஸ்.மே.மாக்கிறேட் மறைக்கல்வி நடுநிலையம், மன்னார்.

# பறநாட்டாங்கல் ஊரில் அமைவுற்ற புனித அந்தோனியார் ஆலயம்

ஓமந்தை பங்கின் பறநாட்டாங்கல் என்னும் ஊரிலே புதிதாக புனித அந்தோனியார் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்றத்தின் பின் பங்குத்தந்தை அருட்பணி. கிறிஸ்ரி ரூபன் பெர்ணான்டோவின் முயற்சியிலும் கிராமத்தவரின் ஒத்துழைப்பிலும் இவ்வாலயம் அமைக்கப்பட்டு 16.06.2010 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு அவர்களால் திறந்து வைக்கப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இக்கூட்டுத் திருப்பலியில் பங்குத்தந்தையுடன் தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த ஆயர் இல்ல விருந்தினர் அருட்பணி. வீனோ பேர்வின் சே. ச அவர்களும் மறை-மாவட்டத்தின் பல குருக்களும் இணைந்து சிறப்பித்திருந்தனர். வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்களும் கலந்துகொண்டார். இத் திறப்பு விழாவின் போது சைவ சமயத்தை சேர்ந்த திரு. N. சதாசிவம் என்பவரால் புனித அந்தோனி-யாருக்கு வாழ்த்துப் பாமாலை பாடப்பட்டது.

அற்புதம் நிறைந்த அந்தோனியாரே – கோடி
அற்புதம் நிறைந்த அந்தோனியாரே
ஆதரித்து எங்களை காத்திடுவீரே
அகதிகளாய் நாங்கள் அல்லல் பட்டோம்

ஆதரவின்றி அலைந்து திரிந்தோம்
சொத்துக்கள் இழந்தோம் சொந்தங்கள்
இழந்தோம்- தந்தையே
சுகம் பெற இன்று உம்மிடம் வந்தோம்

பவனி வரும் போது பக்தியாய் நின்றோம்
வருகை தரும் போது வரிசையாய் நின்றோம்
வாரார் எங்கள் தந்தை – பாதுகாக்க
வாரார் எங்கள் தந்தை

பறநாட்டாங்கல் என்ற ஊராம் - அதைப்
பாதுகாக்கும் எங்கள் தந்தை
பாவிகள் நாங்கள் ஏங்குகின்றோம்
பரிவுடன் எம்மை காத்திடுவீரே





# குருத்துவ பொழிவு

## குருக்களின் ஆண்டையொட்டிய சிறப்புக் கட்டுரை

# மறைமாவட்ட அருள்பணியாளரின் ஆன்மீகம்

ஆயர் செ. சி. சிங்கராயன், சேலம் மறைமாவட்டம்.

### சென்ற மாத தொடர்ச்சி

### 4.1. மறைமாவட்டத் திருச்சபையில் அங்கம் வகித்து நிலைத்த உறவைக் கொண்டாடுபவர்கள்


மறைமாவட்டத்தோடு அங்கத்துவம் பெறுவதின் மூலம் ஒரு அருட்பணியாளர், மறைமாவட்ட அருட்பணியாளராக ஆகின்றார். மக்களை ஒன்றிணைத்து உறவின் சமூகத்தைக் கட்டியெழுப்ப அழைக்கப்படுகிறார். இயேசுவை அறியாதவர்களுக்கு நற்செய்தியை அறிவித்து இந்த சமூகத்தை விரிவுபடுத்த அழைக்கப்படுகிறார். மறைமாவட்ட அருட்பணியாளர்கள், தங்களின் பணிவாழ்வை வாழ்வதிலும், திருத்தூதர்களின் வழித்தோன்றலாகிய ஆயரோடு இணைந்திருப்பதன் வழியாகவும், தங்களுடைய குருகுலத்தில் குருத்துவக் குடும்ப உறவை ஏற்படுத்துவதிலும் மறைமாவட்டத்தின் நிலைத்த பணியில் பங்கேற்பதிலும் தங்களின் சிறப்பான ஆன்மீகத்தை இனம் கண்டு கொள்கிறார்கள்.

### 4.2. ஆயரோடு தோழமை

மறைமாவட்ட அருட்பணியாளர் தனது அங்கத்துவத்தின் மூலம் மறைமாவட்ட ஆயரோடு ஒன்றித்திருக்கிறார். உண்மையான ஒன்றிணைப்பில், ஒத்துழைப்பில், மறை ஆயர், மறைமாவட்ட அருட்பணியாளர் புனிதத்தில் வளரத் துணைசெய்கிறார் (திருச்சபை. 41). அதே வேளையில் ஆன்மீக மற்றும் சகோதரத் தோழமையும் கொண்டிருக்கின்றார். தனது மறை ஆயரின் அதிகாரத்தில் முதன்மை அருட்பணியாளராகிய கிறிஸ்துவின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு, கீழ்படிதலிலும், மரியாதையிலும், அன்பிலும் ஆயரோடு ஒத்துழைக்கின்றார். ஆயர் தோழமையானது விசுவாசம், நம்பிக்கை, அன்பை மையப்படுத்தி ஒருவரை ஒருவர் மதிப்பதிலும், ஒருவரையொருவர் நம்புவதிலும் மற்றும் சகோதர அன்பிலும் ஆழப்படுத்தப்படுகின்றது. எல்லா அருட்பணியாளர்களும், (துறவற அருட்பணியாளர்களோ அல்லது மறைமாவட்ட அருட்பணியாளர்களோ) ஆயரோடு தோழமை கொண்டிருத்தல் அவசியம். மறைமாவட்ட அருட்பணியாளர்கள் திருச்சபையைக் கட்டியெழும்புவதில் ஆயரோடு கொண்டுள்ள தோழமை மிகச்சிறந்த ஒன்றாகும்.

### 4.3. அருட்பணியாளர்களோடு தோழமை

ஓர் அருட்பணியாளர், தனது ஆன்மீக மற்றும் அப்போஸ்தல வாழ்வைத் தான் சார்ந்திருக்கும் அருட்பணியாளர்களோடு வாழ்ந்தாக வேண்டும். மறைமாவட்ட அருட்பணியாளர்களின் ஆன்மீகத்தைச் சகோதரத்துவ ஆன்மீகம் என்று அழைக்கலாம். குருக்கள் குழாம்தான் ஓர் அருட்பணியாளர், தனது ஆன்மீகத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய முதல்குழு. திருமணமானவர்



களுக்குத் தங்களின் குடும்பம் இருப்பது போலவும் துறவறத்தார்களுக்குத் தங்களது சபை இருப்பதுபோலவும் மறைமாவட்ட அருட்பணியாளர்கள் தங்கள் சகோதரக் குழுவில் ஆன்மீகத்தை வாழவேண்டும். இந்த சகோதரத்துவ ஆன்மீகம் ஓர் அருட்பணியாளர் தனது தனிமை நிலையைப் போக்கி, தனது விசுவாசத்தில் உறுதிபெற்று, அதனால் விசுவாசிகளுக்குத் தன்னையே தாராளமாக வழங்கிப் பணிசெய்யப் பெரிதும் துணைபுரியும். இந்த அருட்பணியாளர்களின் தோழமையே இன்றியமையாத திருச்சபையின் திருவருட்சாதன அடையாளம். குருத்துவ சகோதரத்துவம், அருட்பணியாளர்களின் ஒற்றுமை - இவைகளே நற்செய்தி அறிவிப்பதன் கூறுகள். இந்த குருத்துவ சகோதரத் தோழமை, ஒவ்வொரு மறைமாவட்ட அருட்பணியாளரின் ஆன்மீக வாழ்வின் நற்சான்றாகும்.

### 4.4. இறைமக்களோடு தோழமை

மறைமாவட்ட அருட்பணியாளர், மக்களின் மத்தியில் வாழ்ந்து பணிசெய்ய அழைக்கப்பட்டவர். இறைமக்கள் தங்களின் அழைத்தலை உணர்ந்து செயல்படத் துணைசெய்பவர். இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளும், திருச்சபைச் சட்டமும் பின்வருமாறு கூறுகின்றன. ஒரு குரு, ஆயரோடு இணைந்து, தான் அனுப்பப்பட்ட, குறிப்பிட்ட பகுதியில் (பங்கில்) வாழும் மக்களைக் கட்டியெழுப்பத் தன்னுடைய தனித்த செயல்பாடுகளினாலும், தான் பெற்ற இறையழைத்தலுக்கேற்பவும், பணி வாழ்வால் தன்னையே அர்ப்பணிக்கிறார் (தி.ப.வா.11, தி.8:369). மறைமாவட்ட அருட்பணியாளர், தான் பணிபுரியும் பங்குத்தளத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், இடர்பாடுகள். பெருந்துன்பங்கள் இவைகளைத் தனது பணிவாழ்வின் தடைகள் என்றோ, இடர்பாடுகள் என்றோ கருதாமல், இவைகள் எல்லாம் தனது ஆன்மீகத்தை வாழ்வதற்கு உதவும் பாலங்கள் என்று ஏற்றுக்கொண்டு வாழும்போது அவைகள் புனிதத்தை அடையத் துணைபுரியும் வழிகளாகும்.

இப்பின்னணியில் அருட்பணியாளர் இல்லாத இறைமக்களின் கூட்டத்தை, முழுமையான விசுவாசத்திருக்கூட்டம் என்று கூறமுடியாது. காரணம் அனைத்துத் தரப்பு மக்களையும், அன்பினால் ஒன்றுகூட்டி, இறைச்சமூகமாக வாழவைப்பது ஒவ்வொரு மறைமாவட்ட அருட்பணியாளரின் பணியும் கடமையுமாகும். இப்படிப் பணி செய்கின்ற போது, பங்குத்தளத்தில் பொதுநிலையினரிடையே நாம் அந்நியப்படுத்தப்பட்டோம் என்ற எண்ணம் எழாமல், அன்பு சமூகமாக இணைந்து வளர இது ஏதுவாகும்.

### 4.5. திருச்சபையைத் தன் மணவாட்டியாகக் கருதி அன்பு செய்தல்

கிறிஸ்துவே உண்மையான மணவாளன் (யோவா 2:11). அவர் திருச்சபையை அன்பு செய்து தன்னையே வழங்குகிறார் (எபே.5:25-29). ஒரு அருட்பணியாளர், கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் உருவம், கிறிஸ்துவின் தொடர்ச்சி, திருச்சபையின் மணவாளன். எப்போதும் தலைவரும் ஆயனுமாகிய கிறிஸ்துவோடுள்ள உருவொப்பமைவினால் அவர் திருச்சபை சமூகத்தின் மட்டில் இந்த மணவுறவு கொண்டுள்ளார். கிறிஸ்துவுக்கு பதிலாளி என்னும் நிலையில், அருட்பணியாளர் திருச்சபைக்குள்ளே மட்டுமன்றி அதற்கு முன்னேயும் நிறுத்தப்படுகிறார் (மே.உ.த.22).

மணமகனாம் கிறிஸ்து திருச்சபைக்காகத் தன்னையே முழுமையாகக் கையளித்து அன்பு செய்ததுபோல ஒவ்வொரு அருட்பணியாளரும் திருச்சபையை அதேபோன்று அன்புசெய்ய வேண்டும். ஒவ்வொரு அருள்பணியாளரும் தாயைப்போலத் தன்னுடைய மந்தையை அன்புசெய்ய அழைக்கப்படுகிறார். அருள்பணியாளரின் பணி தாய்மைப் பணி. தன்னுடைய ஆன்மீகச் செயல்பாடுகளில் இதை அவர் வெளிப்படுத்துகிறார்.

என் பிள்ளைகளே, உங்களில் கிறிஸ்து உருவாகும்வரை உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகின்றேன் (கலா.2:19) என்ற புனித பவுலின் கூற்றை ஒவ்வொரு அருட்பணியாளரும் மெய்ப்பிக்க வேண்டும்.

### 4.6. பணிகளை நிறைவேற்றுவதில் மிளிரும் ஆன்மீகம்

அப்போஸ்தலப் பணிவாழ்வே மறைமாவட்ட அருட்பணியாளர்களுடைய ஆன்மீகத்தின் அடிப்படை. மறைமாவட்ட அருள்பணியாளர்கள் மடத்துறவிகளோ, அல்லது மௌனத் துறவிகளோ அல்ல. அவர்களின் ஆன்மீகம் அவர்களின் பணிவாழ்விலிருந்தே வெளிப்படவேண்டும். இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பு, மடத்துறவு வகையிலான ஆன்மீகமே மறைமாவட்ட அருள்பணியாளர்களாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் அதிலும் குறிப்பாக மேய்ப்பர்களை உங்களுக்குத் தருவேன் என்ற சுற்றுமடலுக்குப்பின் புதுவகையான ஆன்மீகக் கோட்பாடுகள் நிறுவப்பட்டன. மறைமாவட்ட அருட்பணியாளர்களின் ஆன்மீகம் அவர்களின் பணி செயல்பாட்டிலிருந்தே வெளிப்படவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அருட்பணியாளர்கள் தங்களின் புனிதத் தன்மையைத் தங்களின் உண்மையான, தளராத, ஊக்கமுடன் செயல்படுத்தும் பணிவாழ்விலிருந்தே அடையவேண்டும். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல், ஆவியின் பணியையும், நீதிப்பணியையும் புரிபவர்கள், தங்களுக்கு உயிரூட்டித் தங்களை வழிநடத்தும் ஆவிமட்டில் அடித்தளம் கொண்டிருக்கும்போது ஆன்மீக வாழ்வில் உறுதிபெறுவார்கள் என்றார். அருட்பணியாளரின் புனிதம் அவரது அருட்பணியில் பெரியதொரு பங்காகும் (மே.உ.த.24). இத்தகைய திருப்பணி கடவுளின் வார்த்தையை அறிவித்தல், திருவருட்சாதனங்களை நிறைவேற்றுதல், மக்களை வழிநடத்துதல் போன்ற முப்பரிமாணங்களில் வெளிப்படுத்தப்படுகிறது. தொடரும்

# குருத்துவம் ஒரு வரலாற்றுப் பார்வை

தொகுப்பு. அருட்பணி. நெவின்ஸ் யோகராச்

### சென்ற மாத தொடர்ச்சி ........

### இன்றைய காலகட்டம் (21 ஆம் நூற்றாண்டு)

காலத்தின் அறிகுறிகளுக்கேற்ப திருச்சபை தன்னை புதுப்பிக்க எடுத்த முயற்சியின் வெற்றிக்கனியே இரண்டாம் வத்திக்கான் சங்கம். அது 1962 அக்டோபர் முதல் 1965 டிசம்பர் வரை நடைபெற்றது. வத்திக்கான் சங்க ஏடுகள் தொகுப்பில் 16 ஏடுகள் உள்ளன. அவற்றுள் குருத்துவத்தைப் பொறுத்தமட்டில் முக்கியமானவை

1) திருச்சபை
2) திருப்பணியாளர்களின் பணியும் வாழ்வும்
3) திருச்சபையில் ஆயர்களின் அருள்பணி
4) திருப்பணிப் பயிற்சி

**வத்திக்கான் சங்க ஏடுகளில் பொதிந்துள்ள சில முக்கியக் கருத்துக்கள்:-**

1. திருச்சபை ஓர் இறுக்கமான படிநிலை அமைப்பு அல்ல, மாறாக அது ஓர் இறைமக்கள் சமூகம். இச்சமூகத்திலுள்ள அனைவரும் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கேற்று அவரது முப்பணிகளான – போதிக்கும் பணி, புனிதப்படுத்தும் பணி, வழிநடத்தும் பணி ஆகியவற்றை கூட்டுப்பொறுப்புடன் நிறைவேற்ற அழைக்கப்பட்டுள்ளனர்.

2, பொதுநிலையினரின் குருத்துவமும் திருப்பணியாளர்களின் குருத்துவமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பும் உறவும் கொண்டவை. ஏனெனில் இரண்டின் ஊற்றும் ஒன்றே. அது கிறிஸ்துவின் குருத்துவம். இவ்வாறு இரு நிலையினரும் கிறிஸ்துவின் ஒரே திருப்பணியில் பங்கு கொள்கின்றனர். இருப்பினும் இரண்டும் "தரத்தில் மட்டுமின்றி இயல்பிலும் வேறுபட்டவை"

3. திருப்பணியாளர்கள் இறைமக்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் கடவுளின் மக்களுக்கு ஊழியம் புரிய அழைக்கப்படுகின்றனர். இதற்காகவே போதித்தல், புனிதப்படுத்தல், வழிநடத்துதல் ஆகிய முப்பணிகளையும் ஆற்றுகின்றனர். இம்மூன்றும் இன்றியமையாதவை. ஒவ்வொரு பணியும் தனித்தனி சிறப்புப்பெற்றவை. இவற்றுள் இறைவாக்குப்பணி முதன்மையானது.

4. திருப்பணியாளர்கள் தங்களின் பணிக்கான அதிகாரத்தை இறைவனிடமிருந்தும் இறைமக்களிடமிருந்தும் பெற்றுக் கொள்கின்றனர். தூய ஆவியாரே அதன் ஊற்று. இவ்வதிகாரம் இறைமக்களோடு இணைந்து அவர்களுக்காக பணி புரியவே தரப்பட்டுள்ளது. ஆதலால் திருப்பணியாளர்களின் அதிகாரம் வரம்பற்றது அல்ல. அது இறைவார்த்தைக்கு கட்டுப்பட்டதே அன்றி அதற்கு மேற்பட்டதல்ல. இறைவார்த்தையை மேல்வரிச்சட்டமாகக் கொண்டு திருப்பணியாளர்கள் செயல்பட்டால் அதிகாரம் உண்மையான பணியாக விளங்கும்.

**முடிவாக...**

"திருச்சபையின் யன்னல்களை திறந்துவிடுங்கள் ....... சுத்தமான காற்று உள்ளே நுழையட்டும்" என்று 23 ஆம் அருளப்பர் அறைகூவல் விடுத்தபோது அகில உலகமே ஒரு தடவை திரும்பிப்பார்த்தது. பழமைவாத போக்குகள் நிறைந்து காணப்பட்ட திருச்சபையில், 'உங்கள் மேல் புதிய ஆவியை ஊற்றுவேன்' என்று யோவேல் இறைவாக்கினர் வழி இறைவன் சொன்னதைப்போல இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையில் பல புதிய மாற்றங்களையும் திருப்பங்களையும் கொண்டுவந்தது. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்திற்கு முந்திய காலத்தில் குருக்களின் பணி அன்றைய சூழலுக்கும் தேவைக்கும் ஏற்ப மிகக் குறுகிய வட்டத்திற்குள் அடக்கப்பட்டது. குரு என்பவர் வழிபாட்டுத்தலைவராகவும் பீடத்தைச் சுற்றி வாழ்பவராகவும் மட்டுமே காணப்பட்டார். ஆனால் 2 ஆம் வத்திக்கான் சங்கம் திருச்சபையைப் பற்றியும் குருக்களின் செயல்பாடுகள் பற்றியும் புதியதொரு கண்ணோட்டத்தை வழங்கியது. மக்களின் பண்பாட்டுப் பொருளாதார சமூக நலன்களில் ஈடுபாடு, இவற்றில் பெருந்தாக்கங்களை ஏற்படுத்தும் அரசியல் பற்றிய தெளிவு, மதங்களிடையே நல்லுறவு, நவீன அறிவியல் வளர்ச்சியில் பங்கேற்பு என மனிதனை தொடர்புபடுத்தும் அனைத்தையும் மையங்கொண்ட 'முழு மனித வாழ்வு' என்பது சங்கத்தின் கண்ணோட்டம். காலத்தின் தேவைக்கேற்ப தன்னையே வளைத்து அர்ப்பணிக்கும் செயற்பாட்டுத்திருச்சபையை சங்கம் வலியுறுத்துகின்றது. 'இன்றைய உலகில் திருச்சபை' என்பதன் பொருள் 'உலகிற்காகவே திருச்சபை' எனக்கூறலாம். காரணம் திருச்சபையின் பணி உலகின் மத்தியில்தான் நிறைவேறுகின்றது. ஆகவே மனிதத்தை மையங்கொண்ட திருச்சபையின் பணிக்காக தம்மையே அர்ப்பணித்த குருக்களும் இன்று மக்களை இறைவனோடு ஒப்புரவில் இணைக்கும் ஆன்மீகப்பணியோடு மனிதத்தை பாதிக்கும் சமூக அரசியலிலும் மாற்றங்களை கொண்டுவர அழைக்கப்படுகின்றனர். அப்பொழுதுதான் அது முழுமையான ஆன்மீகப்பணியாகிறது.

இந்த வகையில் எமது மறைமாவட்டத்தில் ஆன்மீக சமூக பொருளாதார பணிகளில் பல்வேறு மட்டங்களில் பொதுநிலைப்பணியாளர்களோடு இணைந்து திருநிலைப்பணியாளர்களும் தங்களை அர்ப்பணித்து வருகின்றமை உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இவ்வாறு இறை அழைப்பின் குரல்கேட்டு இறைபணி செய்ய முன்வந்து எம்மண்ணிலே பணி புரிந்து பல ஆயிரம் ஆன்மாக்களை இறைவனிடமாக மனந்திருப்பிய குருக்களையும் இன்னும் ஆன்மீக பசியோடு மக்களின் முழுமனித விடுதலைக்காக உழைத்து வித்தாகிப்போன எங்கள் பாசமுள்ள குருக்களையும் நினைத்து நெஞ்சுருகி நிற்கின்ற வேளையிலே குருத்துவமென்பது தங்களை பிறருக்காக கரைத்துக்கொள்கின்ற ஒரு தியாகச்செயல். இந்த வகையில் இன்று வரலாற்றுக் குருத்துவமானது இயேசுவின் பாதச்சுவடுகளை பின்பற்றி பல ஆயிரம் ஆயிரம் உயிர்த்தியாகங்களையும் கடந்து பயணித்து வருகின்றது என்பது இயேசுவின் உண்மையான குருத்துவத்திற்கு ஒரு சிறந்த சான்றாகும் என்றால் அது மிகையாகாது.

வாழ்க குருத்துவம் வளர்க அவர்கள் பணி. - முற்றும் -

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

## கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் 175வது ஜூபிலி விழா

இலங்கையின் கொழும்பு மாநகரத்தின் நீலக்கடற்கரை ஓரத்திலே கோயில் கொண்டு பக்த கோடிகளுக்கு நீங்காது அருள்பாலிக்கும் கோடி அற்புதராம் புனித அந்தோனியாரின் திருவிழா 13.06.2010 ஞாயிற்றுக்கிழமையன்று வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. இது இந்த திருத்தலத்தின் 175வது மாபெரும் ஜூபிலி விழாவாகும். ஆனித்திங்கள் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணி மற்றும் 6.00மணிக்கு தமிழ் மொழியில் திருவிழா திருப்பலிகள் இடம்பெற்றன. திருவிழா சிறப்புத் திருப்பலிகள் காலை 8.00மணிக்கு தமிழ் மொழியிலும் 10.00 மணிக்கு சிங்கள் மொழியிலும் 12 மணிக்கு ஆங்கில மொழியிலும் இடம்பெற்றன. மாலை 6.00 மணிக்கு திருச்சுரூப பவனியும் அதனைத் தொடர்ந்து நற்கருணை ஆசீர்வாதமும் இடம் பெற்றன. அருட்தந்தை




தேவராஜ் (அ.ம.தி) தமிழ் மொழியில் மறையுரை வழங்கினார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் அணிதிரண்டு திருவிழாவில் கலந்து கொண்டனர்.

## உலகமதிப்பீடுகளால் கறைபட்டுப்போகாமல் நற்கருணையில் வேரூன்ற வாழ்த்துகின்றேன்

### -உலகலாவிய குருக்கள் ஆண்டு நிறைவில் யாழ் ஆயர் -

கடந்த ஆண்டு பிரகடனம் செய்யப்பட்ட குருக்கள் ஆண்டு நிறைவடைகின்ற இத்தருணத்தில் யாழ் ஆயர் தமது வாழ்த்துச் செய்தியை தனது குருத்துவ குழாமிற்கு வழங்கினார். அச்செய்தியில்,

"பரபரப்பான நவீன உலகமிது. பதவிமோகமும், இறைநம்பிக்கையை தகர்த்தெறியும் அறிவியல்போக்கும், வெறும் உலக மாயைகளினால் ஈர்க்கப்படும் ஒரு செல்நெறியும் (Trend) சர்வ சாதாரணமான வாழ்க்கையாகிவிட்ட ஒரு உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த போக்கை மாற்றியமைக்கக்கூடிய ஒரே மருந்து, இயேசுவின் திரு இருதயத்தில் இருந்து பிறந்த குருத்துவம் மட்டுமே. எளிமையான, தூய்மையான – ஆன்ம வாஞ்சையுள்ள குருவாய் வாழ்ந்து மரித்த புனித யோண் மரிய வியானி இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. உலகம் மடமையென கருதியதை ஆண்டவர் தெரிந்து கொண்டார். இந்த நிலவுலகில் குருக்களாக அழைக்கப்பட்ட ஊழியர்களும் வெறும் உலகமதிப்பீடுகளால் கறைப்பட்டுப்



போகாமல், அவற்றை கடந்து நின்று, தம்மை உள்ளார்ந்து புதுப்பித்து – தமது பலியாகிய நற்கருணையில் வேரூன்றி, உலகின் தந்திரங்களோடு போராடி வெற்றிகொள்ள வாழ்த்துகின்றேன்" என்றார்.

நன்றி – பாதுகாவலன்

## கியூடெக் நிறுவனத்திலிருந்து பிரியாவிடை பெறுகிறார் அருட்பணி. சி. ஜெயக்குமார் அடிகளார்

யாழ். மறைமாவட்டத்தின் கத்தோலிக்க நிறுவனமான கறிற்றாஸ்-கியூடெக்கின் இயக்குனராக 1997ம் ஆண்டு தொடக்கம் இவ்வருடம் வரையிலான 13 ஆண்டு காலப்பகுதியில் யாழ். மறைமாவட்டம் முழுவதும் அரும்பணியாற்றிய அருட்பணி. சி.ஜெயக்குமார் அடிகளார் இந்நிறுவன பணியிலிருந்து பிரியாவிடை பெறுகிறார். போர்க்கால சூழ்நிலைகள், இடப்பெயர்வுகள், சுனாமி அனர்த்தங்கள் மத்தியில் இவரின் தலைமைத்துவ வழிகாட்டுதலில் கியூடெக் நிறுவனம் யாழ். மறைமாவட்ட மக்களின் துயர் துடைத்து பலரதும் பாராட்டைப் பெற்றது. கியூடெக் பணியிலிருந்து ஓய்வு பெறும் அருட்தந்தை சி.ஜெயக்குமார் அவர்கள் பொறுப்பேற்கும் புதிய பணி சிறக்க வாழ்த்துவதோடு யாழ். கத்தோலிக்க திருச்சபை கியூடெக் நிறுவனத்தின் புதிய இயக்குனராக பணிப் பொறுப்பேற்றுள்ள அருட்பணி. ஜோண் சேவியர் பேர்ணாட் றெக்னோ அடிகளாரின் மனிதநேய பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

## அசிப்பா தேசிய கூட்டத்தொடர்

இவ்வருடத்திற்கான 2வது அசிப்பா தேசிய கூட்டத்தொடர் கடந்த 10 – 11, ஆனி 2010 நாட்களில் கொழும்பு மட்டக்குளியில் உள்ள டி மசனட் இல்லத்தில் நடைபெற்றது. முதல் நாள் மாலை 4 மணிக்கு கொழும்பு பேராயர் இல்லத்திலே கொழும்பு மறைமாவட்ட அசிப்பா மத்திய குழு அங்கத்தவர்களுடனான ஒன்றுகூடலும் கலந்தாய்வும் இடம்பெற்றது. மறுநாள் நடைபெற்ற தேசிய கூட்டத்தில் தேசிய ரீதியில் கொண்டாடப்பட்ட அன்பிய தினம் பற்றிய மீளாய்வும் இலங்கையில் 2012ம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய அன்பிய பேரவை பற்றிய தகவல் பரிமாற்றமும் மறை மாவட்டங்களின் அன்பிய செயற்பாட்டறிக்கையும் முக்கிய கருப்பொருட்களாக இருந்ததுடன் இன்னும் பல விடயங்களும் கலந்துரையாடப் பட்டன. தேசிய அன்பிய ஆணைக்குழுவின் தலைவர் திருமலை மட்டு மறைமாவட்ட ஆயர் அதி.வண. கிங்சிலி சுவாம் பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இவ் அன்பிய தேசிய கூட்டத்தில் தேசிய இயக்குனர், செயலர், மறைமாவட்ட இயக்குனர்கள், பிரதிநிதிகள் என 20 பேர் பங்கேற்றனர். தேசிய அன்பிய 1வது கூட்டத்தொடர் மன்னாரில் நடைபெற்றிருந்தது. 3வது கூட்டத் தொடர் யாழ்ப்பாணத்தில் நடைபெற-வுள்ளது குறிப்பிடத்தக்கது.






## உலகத்திருச்சபை செய்திகள்

## "மரணம் குறித்த பயமானது பலரை நம்பிகையிழக்கச் செய்கிறது"

### – திருத்தந்தை –

மரணம் குறித்த பயமானது பலரை வாழ்க்கையில் நம்பிக்கை இழக்கச் செய்கிறது மற்றும் அழிந்து போகும் மாயைகளில் ஆறுதலைத் தேட வைக்கின்றது என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார். வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காவில் இடம்பெற்ற கர்தினால் பவுல் அகுஸ்தீன் மேயெரின் அடக்கச் சடங்கு திருப்பலியின் இறுதியில் மறையுரையாற்றிய திருத்தந்தை, விசுவாசம் நம்மை ஏமாற்றாது. ஏனெனில் கடவுளின் அன்பு தூய ஆவியில் நம் இதயங்களில் பொழியப்பட்டுள்ளது என்றும், கடவுளில் நம்பிக்கை வைத்துள்ள கிறிஸ்தவர்கள் மரணத்தைக் கண்டு பயப்பட தேவையில்லை என்றும் கூறினார்.

## "பொருளாதாரத் துறையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் பிறரன்பை அடித்தளமாகக் கொண்டிருக்க வேண்டும்"–திருத்தந்தை –



பொருளாதாரத் துறையில் எடுக்கப்படும் அனைத்துத் தீர்மானங்களும் கொள்கைகளும் உண்மையில் பிறரன்பை அடித்தளமாகக் கொண்டதாக அமைய வேண்டும் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார். பொருளாதார வாழ்வுக்கான ஒருங்கிணைந்த நன்னெறி அணுகுமுறையானது பொதுநலனை மேம்படுத்துவதாய் அமையவேண்டும். இது, மனித மாண்பை மதிப்பதில் அடித்தளத்தைக் கொண்டிருக்க வேண்டும். மற்றும் உற்பத்தி, வணிக அமைப்புகள், அரசியல் நிறுவனங்கள், சமூக நலன் ஆகியவையே தலையாய இலக்கு என்பதை ஏற்பதாகவும் இருக்க வேண்டும் என்றும் திருத்தந்தை கூறினார்.

## 2011ம் ஆண்டுக்கான உலக இளையோர் தினப் பாதுகாவலர்கள் அறிவிப்பு


2011ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஸ்பெயின் நாட்டிலுள்ள மாட்ரிட் நகரில் நடைபெறவுள்ள உலக இளையோர் தினப் பாதுகாவலர்களாக, தொழிலாளியான புனித இசிதோர், அவரது மனைவி புனித மரிய தெ லா கபேசா, புனிதர்கள் அவிலா தெரேசா, சிலுவை அருளப்பர், லீமா ரோஸ், பிரான்சிஸ் சேவியர், இரபேல் அர்நாய்ஸ் ஆகியோரை அறிவித்துள்ளது வத்திக்கான். இந்த புனிதர்கள் ஸ்பானியத் திருச்சபை வரலாற்றோடு தொடர்புடையவர்கள்.

## "பணத்தை மையமாகக் கொண்ட அணுகுமுறை பொருளாதார நிலையற்றதன்மையை உருவாக்குகிறது"

பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட உலகின் அணுகுமுறை, மனிதன் குறித்த கண்ணோட்டத்தை மட்டுமல்லாமல் பொருளாதாரத்திலும் நிலையற்ற தன்மையை உருவாக்குகிறது என்று திருப்பீட சமூக அறிவியல் துறை கருத்து தெரிவித்தது. திருத்தந்தை 16ம் பெனடிக்டின் 'உண்மையில் பிறரன்பு' என்ற அப்போஸ்தலிக்கத் திருமடல் மற்றும் பொருளாதாரம் குறித்த அதன் நற்தூண்டுதல்கள் பற்றி இந்த திருப்பீடத் துறை நடத்திய ஆண்டு மாநாட்டில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட வத்திக்கானுக்கான அமெரிக்க ஐக்கிய நாட்டு முன்னாள் தூதர் மேரி ஆன் க்ளென்டன், இம்மாநாடு குறித்து நிருபர் கூட்டத்தில் பேசிய போது, பணத்தை மட்டும் மையமாகக் கொண்ட உலகின் அணுகுமுறை, நலிந்த பொருளாதார அமைப்பை உருவாக்குகிறது என்று கூறினார்.

## "உலகில் அணுஆயுத ஒழிப்பிற்கு வத்திக்கான் எப்போதும் ஆதரவளிக்கும்" – பேராயர் மிலியாரே

உலக அளவில் அணுப்பரிசோதனையைத் தடைசெய்வது உலகில் அணுஆயுதங்களின் அதிகரிப்பை தடை செய்யும். மேலும் அது அணுஆயுதங்கள் தடை செய்யப்படுவதற்கும், அவை பரவாமல் இருப்பதற்கும் சுற்றுச் சூழல் மேலும் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் உதவும் என்று ஐ.நாவுக்கான வத்திக்கானின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் செல்ஸ்தினோ மிலியாரே கூறினார். உலகளாவிய அணுஆயுதக் களைவுக்குத் திருப்பீடம் எப்பொழுதும் ஆதரவாக உள்ளது என்றுரைத்த பேராயர் மிலியாரே, இந்த ஆயுதங்களைக் கொண்டிருக்கும் நாடுகள் அணுஆயுதத் தடை உடன்பாட்டில் கையெழுத்திடுமாறு வலியுறுத்தினார்.



## கொத்து வெடிகுண்டுகள் தடைச் சட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு இயேசு சபை அகதிப்பணி அழைப்பு

கொத்து வெடிகுண்டுகள் பயன்படுத்தப்படுவதைத் தடை செய்யும் சட்டம் சர்வதேச அளவில் வருகிற ஆகஸ்ட் முதலாம் திகதி அமுல்படுத்தப்படும் வேளை அதற்கு உலகினர் ஆதரவு வழங்குமாறு ஜே.ஆர்.எஸ் என்ற இயேசு சபை அகதிப்பணி அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. கடந்த 21 ஏப்ரல் அன்று வரையிலான நிலவரப்படி இந்தக் கொத்து வெடிகுண்டுகள் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள 106 நாடுகளில் 30 நாடுகள் இதனை அமுல்படுத்தத் தொடங்கியுள்ளதால் இது உலக அளவில் சட்டமாக மாற வழிவகுத்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி கொத்து வெடிகுண்டுகளைப் பயன்படுத்துதல், தயாரித்தல் மற்றும் இடம் மாற்றுதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன. மேலும், சேமிப்புக் கிடங்கிலுள்ள வெடிகுண்டுகளை அழித்தல், பாதிக்கப்பட்ட நிலங்களைச் சுத்தம் செய்தல், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சமூகங்களுக்கு அரசுகள் ஆதரவு அளித்தல் ஆகியவையும் நடைமுறைப்படுத்தப்பட காலவரையறையும் அறிவிக்கப்படும்.

# வாழ்வு தரும் வார்த்தை

# நற்செய்தி அறிவிப்பு

## அருட்தந்தை கலாநிதி ஜோசப்

உலகெங்கும் சென்று படைப்பிற்க்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள் (மாற் 16:15). நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து விண்ணேற்றம் அடைவதற்கு சற்றுமுன் சீடர்களுக்கு கொடுத்த கட்டளைதான் இது. அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியை பறைசாற்றினர் (மாற் 16:20). கண்ணால் கண்டதை, உற்று நோக்கியதை, கையால் தொட்டுணர்ந்ததை அவர்கள் பறைசாற்றினார்கள். தந்தையோடு இருந்ததும் சீடர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது மான அந்த நிலைவாழ்வை அவர்கள் உலகிற்கு அறிவித்தனர் (1யோவா 1:2). திருத்தூதர்களின் பணியால் உருவானதுதான் திருச்சபை. அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள் (தி.ப 2:42). ஆனால் இன்று நற்செய்தியைப் பறைசாற்றுவது அல்ல நற்செய்திக்கு ஏற்றவாறு வாழ்வது தான் முக்கியம் என்ற எண்ணம் வளர்ந்து வருகிறது. நற்செய்தியைப் பறைசாற்றுவது என்பது சில நேரங்களில் இயலாமல் போகலாம். அதற்காக அதை நிறுத்தக் கூடாது.

### நற்செய்தி அறிவிப்பவர்களின் மேன்மை

நற்செய்தியைப் பறைசாற்றுவதைக் குறித்து புனித பவுல் கூறுவது என்னவென்று பார்ப்போம்: ஆனால் அவர் மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி, அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவார்கள்? தாங்கள் கேள்வியுறாத ஒருவர் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்றுபற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்? அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள்? இதைப் பற்றியே, "நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன" என்று மறைநூலில் எழுதியுள்ளது (உரோ 10:14-15). திருத்தூதர் தொடர்ந்து பின்வருமாறு கூறுகின்றார். நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு (1கொரி 9:16). அவர் தமது அன்புச் சீடரான திமொத்தேயுவுக்குப் பின்வருமாறு எழுதியுள்ளார்: கடவுள் முன்னிலையிலும் வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு அளிக்கப் போகிற கிறிஸ்து இயேசு முன்னிலையிலும் அவர் தோன்றப்போவதை முன்னிட்டும் அவரது ஆளுகையை முன்னிட்டும் நான் ஆணையிட்டுக் கூறுவது: இறைவார்த்தையை அறிவி. வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாயிரு. கண்டித்துப் பேசு, கடிந்துகொள், அறிவுரை கூறு, மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு, ஒரு காலம் வரும், அப்போது மக்கள் நலந்தரும் போதனையைத் தாங்கமாட்டார்கள். மாறாக, செவித்தினவு கொண்டவர்களாய்த் தங்கள் தீய நாட்டங்களுக்கேற்பத் தங்களுக்கெனப் போதகர்களைத் திரட்டிக்கொள்வார்கள்.

உண்மைக்கு செவிசாய்க்க மறுத்துப் புனைகதைகளை நாடிச் செல்வார்கள். நீயோ அனைத்திலும் அறிவுத் தெளிவோடிரு, துன்பத்தை ஏற்றுக் கொள், நற்செய்தியாளனின் பணியை ஆற்று, உன் திருத்தொண்டை முழுமையாய்ச் செய் (2திமொ 4:1-5). இதிலிருந்து ஒரு காரியத்தை நாம் தெரிந்து கொள்ளலாம். நற்செய்தியை அறிவிப்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையே ஆகும். நற்செய்தி அறிவிப்பால்த்தான் கிறிஸ்தவ சமூகங்கள் தோன்றுகின்றன. அவ்வாறான சமூகங்கள் உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் விளங்குகின்றன (மத் 5:13). கிறிஸ்துவுக்குச் சான்று பகர்கின்றன.

### கிறிஸ்தவ சான்று


இயேசு தொடங்கி வைத்த இறை ஆட்சியின் முழுமையான வடிவம் வரலாற்றில் நிலைத்திருப்பது அவரது சீடர் என்ற நிலையினை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளின் வாயிலாகத்தான். உமது ஆட்சி வருக! என்று வேண்டுதல் செய்வதோடு தங்கள் வாழ்க்கைச் சான்றால் அவர்கள் இயேசுவை உலகிற்குப் பகிர்ந்தளிக்கின்றார்கள். உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள் (மத் 5:16) என்ற மறைவாக்கால் எவ்வாறு தமது சீடர்கள் இறைவனுக்குச் சான்று பகர்ந்திட வேண்டும் என்பதை ஆண்டவர்தாமே வெளிப்படுத்துகின்றார். மனித வாழ்வின் பொருள் என்னவென்பதைக் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வால் உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும். ஒருவர் ஒருவரிடம் அன்போடும் மதிப்போடும் வாழ வேண்டும்.

### சான்றும் நற்செய்தி அறிவிப்பும்

சில நேரங்களில் தாங்கள் கிறிஸ்துவின் சீடர்கள் என்பதை அவர்கள் தங்கள் அன்பால் மட்டும்தான் வெளிப்படுத்த இயலும். நற்செய்தி அறிவிப்பு பணிகளின் வரலாறுதான் இதற்கான எடுத்துக்காட்டு. நற்செய்திப் பணியாளர்கள் தங்களது அன்புச் செயலால் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்கின்றனர். இறையாட்சி வந்துள்ளதற்கான அடையாளங்கள்தான் ஆண்டவர் செய்த புதுமைகள் (மத் 12:28). நோய் நொடிகளைக் குணமாக்கிய (மத் 9:35) இயேசுக் கிறிஸ்துவின் பாதையைப் பின்பற்றிய திருத்தூதர்களும் புதுமைகள் செய்தனர் (தி. ப 10:38). "நான் உங்களுக்காக எனக்குள்ள-வற்றையும், ஏன் என்னையுமே மனமுவந்து அளித்திடுவேன்" (2 கொரி 12:15). தமது வாழ்வை முழுமையாக நற்செய்தி அறிவிப்பதற்காக அர்ப்பணித்த திருத்தூதர் பவுலின் வார்த்தைதான் இது. எங்கெல்லாம் இறைவனைப் பறைசாற்ற வாய்ப்பு கிடைக்கின்றதோ அங்கெல்லாம் இறைவனைப் பறைசாற்ற வேண்டும். "நாங்கள் நற்செய்தியை அறிவிப்பதற்கான வாய்ப்பைக் கடவுள் உருவாக்கித் தருமாறு அவரிடம் எங்களுக்காகவும் வேண்டுங்கள்" (கொலே 4:3). வேறொரு காரியத்தையும் அவர் நினைவூட்டுகிறார்: "நான் பேசவேண்டிய முறையில் பேசி இம்மறை பொருளை வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற எனக்காக வேண்டுங்கள்" (கொலோ 4:4). நற்செய்தியைப் பறைசாற்று-பவர்கள் இறைவனின் உடன் ஊழியர் என்று திருவிவிலியம் கூறுகின்றது. கிறிஸ்து வழியாக அனைத்தையும் புதுப்பிக்க வேண்டும், ஒன்று சேர்க்க வேண்டும் என்பதே இறைவனின் திருவுளம். "கால நிறைவில் விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற திட்டமே அம்மறைபொருள்" (எபே 1:10). நற்செய்தியை அறிவிப்பது ஒன்று சேர்ப்பதாகும் நற்செய்தியை அறிவிப்பவர்கள் இறைவனின் உடன் ஊழியர். மீட்பளிக்கும் நற்செய்தியாக உண்மையின் வார்த்தையைப் பிறருக்குச் சொல்வதுதான் நற்செய்தி அறிவிப்பு.

### தொண்டராக அழைப்பு

கிறிஸ்துவைப் பறைசாற்றும் அழைப்பைப் பெற்றவர்கள்தான் எல்லா கிறிஸ்தவர்களும். எனினும் இச்சிறப்பான பணிக்காக இறைவன் சிலரைச் சிறப்பாக அழைக்கின்றார். "தம்மோடு இருக்கவும் நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும் அவர் பன்னிருவரை நியமித்தார்" (மாற் 3:14). தமது சீடர்களிடமிருந்து அவர் தமக்கெனத் திருத்தூதர்களைத் தேர்ந்து கொள்கின்றார். "தூய ஆவியார் தம் விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் தன் கொடைகளைப் பகிர்ந்தளிக்கின்றார்" (1கொரி 12:11). சிலருக்கு அவர் ஞானம் நிறைந்த சொல்வளத்தை அருளுகின்றார்: இன்னொரு-வருக்கோ அறிவு செறிந்த சொல்வளத்தை அருளுகிறார்; மற்றொருவருக்குப் பிணிதீர்க்கும் அருள் கொடையை அளிக்கிறார். ஒருவருக்கு வல்ல செயல் செய்யும் ஆற்றலையும், இன்னொரு-வருக்கு இறைவாக்குரைக்கும் ஆற்றலையும் அளிக்கிறார். இவர்கள் அனைவரும் திருச்சபையின் வளர்ச்சிக்காகவே உழைக்கின்-றார்கள். இவர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட பணிக்கென ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் (தி பா 13:2). நாமும் கிறிஸ்துவால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் என்பதால் அனைத்துச் சூழ்நிலைகளிலும் கடவுளின் பணியாளர்கள் என்பதை நாம் நம் நடத்தையால் காட்டக் கடமைப்பட்டுள்ளோம். (2 கொரி 6:4) "எவரும் குறைகூறா வண்ணம் எங்கள் திருப்பணியை ஆற்ற விரும்புகிறோம். எனவே நாங்கள் எவருக்கும் இடையூறாக இருப்பதில்லை" (2 கொரி 6:3)



மறைத்தூதுப் பணிக்காதத்தான் இறைமகன் இயேசு இவ்வுலகிற்கு வந்தார். தமக்குப் பின் அப்பணியைத் தொடர்ந்து செய்யுமாறு சீடர்களுக்குக் கட்டளையிட்டார் (யோவா 5:57). திருத்தூதர்களின் பணியால் உலகின் பல்வேறு நாடுகளில் திருச்சபை தோன்றியது. நற்செய்தியைப் பறைசாற்றும் பணி, கடமை திருச்சபைக்கு உண்டு. காலம் இடத்தைப் பொறுத்து நற்செய்தியை அறிவிக்கும் விதத்தில் வித்தியாசங்கள் இருக்கலாம். ஆனால் மக்களுக்கு நற்செய்தியை அறிவித்து, அவர்களைக் கிறிஸ்துவின் சீடராக்கி, கிறிஸ்து அரசுக்கு அழைத்துச் செல்லும் கடமையைத் திருச்சபை பெற்றுள்ளது. இதைச் செய்யவில்லையென்றால் அது தன் தலைவருக்கு விசுவாசமாக இருக்கவில்லை என்றுதான் பொருள்.

---

## நீங்காத நினைவுகள்

3ம் ஆண்டு நினைவஞ்சலி



### டேவிற் கொண்சால் சில்வா

பிறப்பு 1971.12.29
இறப்பு 2007.06.17



"வாழ்வோர் மேலும்
இறந்தோர் மேலும் ஆட்சி
செலுத்தவே கிறிஸ்து
இறந்தும் வாழ்கின்றார்"
என்னும் இறைவார்த்தையின்
நம்பிக்கையிலே இருந்து
கொண்டு இறைவா! இதோ மூன்று
ஆண்டுகளுக்கு முன்பதாக உமது
திருப்பாதம் வந்தடைந்த எமது
குடும்பத்தில் தன்னையே உடைத்து
எமக்கு வாழ்வு தந்த எம் சகோதரனை
நீரே விண்ணக பணிக்காய்
அழைத்துள்ளீர். நிலைவாழ்வில்
நம்பிக்கை கொண்டு உயிர்ப்பின்
மகிழ்ச்சியில் இணைத்துக் கொள்வீராக.

இவர் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

---

## குருக்களுக்கோர் வாழ்த்துப்பா

### கலாபூசணம், மன்னார் - அமுது.



இறையன்பை நிறைவாகக் கொண்டவரே
நிறைவாழ்வைக் காட்டும், தளராத் தலைவர்களே
என்றுமே உங்களுக்குத் தெளிவான நெஞ்சமதே
நன்றே நிறைந்திடவே, தலைவணங்கி வாழ்த்துகின்றோம்.

குருக்களின் ஆண்டினை நிறைவாகக் கொண்டாடுகின்றோம்.
குன்றாத உங்கள் புகழ், குவலயத்தில் மலர்ந்திடுக!
கருக் கொண்ட மேகம் போல் கருணையிலே நீர் திளைத்து
வற்றாத ஊற்றது போல், பண்பில் என்றும் சுரந்திடுக! - இறை -

கருவறையில் ஜெனிக்கு முன்பே,
உமையறிந்த தெய்வம் அவர்!
பிறப்பதற்கு முன்னமேயே, திருநிலைப்படுத்திவிட்டார்
உருவமதில் பலவிதமாய், நீங்கள் இருந்த போதும்
உள்ளத்தால் ஒருங்கிணைந்து இறைவன்பணி ஆற்றுகின்றீர். - இறை -


தியாகத் தருவாகி, குணமெனும் குன்றேறி
நிறைவான மனிதர்களாய், நிமலன் பணிநிதம் புரிந்து
தூய உளத்துடனே துணிந்து சென்று பணி புரிந்து
நலமாக மாந்தர் குலம் மகிழ்ந்து வாழச் செய்பவரே - இறை -



சகதியிலே கிடந்துழன்ற மக்களெமைத் தூக்கிவிட்டு
தூய நல்ல வாழ்வுவாழ வழிகள் பல காட்டிநின்றீர்
இகபரம் இரண்டிலும் இனிதாக நாங்கள் வாழ
சுகதுக்க நிகழ்விலெல்லாம் எம்முடனே இணைந்து நின்றீர் - இறை -

"வாசிப்பதை விசுவசித்து, அதனையே போதித்து
போதிப்பதைக் கடைப்பிடித்துக் கருத்துடனே செயற்படென்ற"
மாசற்ற ஆயர் தந்த அபிஷேக வார்த்தைகளை
மனதார ஏற்று மண்ணில், மகிழ்ந்து பணிபுரிபவரே! - இறை -

இறைவார்த்தைப் பணி, புனிதப்படுத்தும் பணி
இறைமக்களெங்களுக்கு இனிதாக எடுத்தியம்பி
குறையேதும் வாராது, வழியே நடத்தும் பணி
முப்பெரும் பணிகள்தமை, முழுமையாகச் செய்பவரே - இறை -



அர்ப்பண வாழ்வினிலே கலந்தொன்றாய்த் தந்தையுடன்
ஆசைமிகக் கொண்டு, அவர்சித்தம் துணைக்கொண்டு
தற்பரன் யேசுமீட்பர், அமுத மொழி தனையேற்று
தரணியில் எம்மையெல்லாம் காத்து வரும் தெய்வங்களே - இறை -

கண்கண்ட எங்களது கனிவான தெய்வங்களே!
காணாத இறைவன் அன்பை உங்களிலே காணுகின்றோம்
விண்ணும் மண்ணும் போற்றும், வீரமிக்க தியாகிகளே
வளமுடனே நீங்கள் வாழ வல்லபரன் அருள்நிறைக! - இறை -

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதை களம்

### மன அமைதியைத் தேடி

உயிர் ஒன்றே மிச்சமென
உடலோடு ஓடி வந்த எம்
உடல்விட்டு உயிர் ஓட உருவாக்கி வைத்த
உலைக்களங்கள் பல இங்கே

பசிபோக்க உணவு இல்லை
படுத்துறங்க இடமும் இல்லை
குடித்துக் குளித்து முடிக்க குடிநீரும் இல்லை!
உடுத்த நல் உடையும் இல்லை
இவ்வளவு மட்டுமா?
இன்னும் எவ்வளவோ இல்லை!

வாழ்வதற்காக ஏங்குவதா?
ஏங்கிக் கொண்டு வாழ்வதா?
முடிவு காண முடியாமல் முடங்கிக் கொண்டு
முட்கம்பிக்குள் வாழ்கிறோம்!

உலை ஒன்றும் கொதிக்காமல்
மனக் குமிறல்கள் மட்டுமே
கொதிக்கின்றன எமக்குள்! - நாம்
அன்னியர்களா?
கதியற்றவர்களா?
திராணியற்றவர்களா?
யாருமற்றவர்களா?

ம.கிளின்ரன் குருஸ், அரிப்பு,
சிலாபத்துறை.


### ஏக்கம்



அநியாயமான உலகில்
அன்பைத் தேடி அழைகின்றேன்
அன்பிற்காக ஏங்கியேங்கி
முழுநிலவாக இருந்த நான் - இன்று
தேய்ந்து கொண்டு செல்கின்றேன் - அன்பே
எப்போது முழுநிலவாக பிரகாசிப்பது
அன்பிற்கு இலக்கணம் அன்னை என்பார்கள்
அன்னை கூட என் அருகில் இல்லை அன்பே!
அன்பே என் நிலைமையைப் பார்த்து
முட்கம்பிகள் கூட சிரிக்கின்றது
வாழ்க்கை பிறருக்காகவே போகட்டும்
அன்பே என்னை பிறர் சிரிப்பில் நீ காண்பாய்

சண்முகம் ஜெனார்த்தன் (சதீஸ்)

### ஒற்றுமையின் தேடல்



மனிதா! உள்ளடக்கம் இல்லாத
உன் இலட்சியங்கள்
இற்றுப் போன பின்னும்
எதிர்காலம் இழந்த தேசத்தில்
எதனைத் தேடுகிறாய்?

மண்ணைக் கிளறி
மத பேதத்தைப் புதைத்துப் பார்!
அநீதியை அழித்து நீ
நீதியை நிலைநாட்டப்பார்!
அணுவாயுதத்தை ஒழித்து
அன்பாயுதத்தை ஏந்திப் பார்!



நீ தேடும் ஒற்றுமை விரைவில்
உன்னைத் தேடி வரும்!
உன் பொதியினுள் புதுக்
கொள்கையினைத் திணித்து
வரும் தடைகளை உடைத்து
புறப்படு நீ ஒற்றுமையாய்.

பி. பிறின்சி லியோன்,
அரிப்பு, சிலாபத்துறை, தரம் - 06

### துளிப்பா

அன்புள்ளவனுக்கு ஆணவம் வருவதில்லை
ஆசை கொண்டவனுக்கு அமைதி
நிலைப்பதில்லை

தகுதியுள்ளவனுக்கு தற்பெருமை
இருப்பதில்லை
தன்னை உணர்ந்தவனுக்கு தடுமாற்றம்
வருவதில்லை

அறிவுள்ளவனுக்கு அனுதாபம் பிடிப்பதில்லை
அனுபவம் உள்ளவனுக்கு அச்சம்
வருவதில்லை
சிந்தனை உள்ளவனுக்கு சீற்றம்
வருவதில்லை
சிரிக்கத் தெரிந்தவனுக்கு துன்பம்
வருவதில்லை

வேடிக்கை மனிதனுக்கு விவேகம் காட்ட
முடிவதில்லை
ஒற்றுமையாய் வாழ்பவனை வேற்றுமை
என்றும் நெருங்குவதில்லை.

ஓ. சுதர்சன்,
வடக்குவழவு, நானாட்டான்.

### மன்னவரின் தரிசனம்

நின்னருள் நேசரை நான் கண்ட
அந்நாள்! எண்ணிலா இன்பத்து
பெருங்கடலில் மூழ்கலானேன்!
கனவு கண்டதிலே கண்ணுக்குத்
தோன்றாமல் விண்ணகந் தொட்டு வந்தவர்
வினவக் கண் விழித்தேன்
எண்ணியெண்ணிப் பார்த்தேன் அவர்
யாரெனச் சிந்தை செய்தேன்
யேசுவின் திருவுருவம் அங்ஙனமே என்
கண்முன் நின்றாரே ஒளியோடு தரிசனமாய்...!

அ. ஸ்டெலா மேரி,
இல:51, துட்டுவாகை, நேரியகுளம்.

## குழந்தைகள்

திருமதி இ. பற்றிசியா பீரிஸ்,
வங்காலை – 08

நம் எல்லோருக்கும் வாழ்வில் கிடைத்தற்கரிய செல்வம் நமது குழந்தைகள்தான். இவர்கள் நமக்குக் கடவுளிடம் இருந்து வரும் ஒரு கொடையாகும். ஆனால் பல பெற்றோர் தம் குழந்தைகளை எப்படி வளர்ப்பது என்று தெரியாமல் இருக்கின்றனர். பல பெற்றோர்கள் குழந்தைகள் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்தால் போதும் என்று நிறைவடைகின்றனர். ஆனால் வேறுசில பெற்றோர்கள் தங்களின் விருப்பப்படி தான் நடக்க வேண்டும் என்று கண்டிப்புடன் வளர்த்து வருகின்றார்கள். குழந்தைகள் நமது அடிமைகள் என்று நினைக்க வேண்டாம். நம் ஒவ்வொருவருக்கும் பலவிதமான ஆசைகள் இருப்பது போல் சகல குழந்தைகளுக்கும் நிச்சயமாக விருப்பங்கள் நிறையவே இருக்கும். குழந்தையின் எதிர்காலம் பெற்றோரின் வழிநடத்தலில்தான் இருக்கின்றன. ஆகவே உங்களுக்கு நேரம் கிடைக்கின்ற பொழுது அதை வீணாக்காமல் குழந்தைகளுக்கு கல்வியை கற்றுக் கொடுத்து ஒரு நல்ல ஆசானாக செயல்படுங்கள். பெற்றோரே குழந்தைகளின் முதல் ஆசிரியர். குழந்தைகள் பாடசாலைக்கு புறப்படுகின்ற பொழுது இறைவேண்டல் செய்து ஆசீர் அளித்து அனுப்புங்கள். பாடசாலைக்குக் குழந்தைகள் போக காசு கேட்பார்கள். கேட்கின்ற பொழுது தேவை என்னவென்று அறிந்து கொடுங்கள். செலவு செய்யவும் சேமித்து வைக்கவும் பழக்கப்படுத்துங்கள். ஒவ்வொரு குழந்தைகளுக்கும் தனிப்பட்ட திறமைகள் இருக்கக் கூடும். அவர்களுக்கு எதில் ஆர்வம்



அதிகமாக இருக்கின்றது என்பதை முதலில் கண்டுபிடியுங்கள். சைக்கிள் ஓடுவது, பந்து அடிப்பது, சித்திரம் வரைவது, படிப்பது, பாடுவது இப்படியான நேரங்களில் அவர்களின் ஆர்வத்தைக் குறைக்க நீங்கள் நினைக்க வேண்டாம். குழந்தைகள் பூக்கள் போன்றவர்கள். ஆகவே அவர்களை அளவுக்குமீறி துன்புறுத்தாமல் இதமாகப் பேசி பாசத்தைப் பொழிந்து அவர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றுக் கொள்ளுங்கள். கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்தவர்களாக மாற்ற பெற்றோர்களாகிய நீங்கள் அதிக முயற்சி எடுங்கள். குழந்தைகளின் எதிர்காலத்தை தீர்மானிப்பவராக இல்லாமல் சீரமைப்பவராக இருக்க வேண்டியது அன்பு பெற்றோருக்கு உரிய சிறப்பாகும்.

## சிறுகதை



### பரிசு

யோசப்பாலா

எழிலூர்க் கிராமத்தின் அழகிற்கு உயர்ந்து நிற்கும் ஆன்மீகத் தேடலின் அடையாளமாக மலைவேம்பு தோப்பின் இடையே காட்சி தரும் அந்த மாதாகோவில் முன்றலில் மெய்மறந்து அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தார் நேசராசா. நினைவுத் தேடல் யாவும் அவரது பால்ய நினைவுகளை மீட்க முப்பது ஆண்டுக்கு முன் சென்றது. சொந்த ஊருக்கு வந்தவர் அவ்வூரின் அடையாளங்கள் பல மாற்றம் பெற்ற போதும் தன் நினைவில் நினைவழியா சிறுவயது நினைவுகள் துளிர் விட்டன. குறும்பு செய்த பள்ளிப் பருவம், பசுமை நினைவுகளாய் நண்பர்களுடன் நடமாடிய ஆலய முன்றலில், கண் பார்வை தெளிவாய் தெரியாத அன்னம்மா பாட்டியிடம் பெற்றுக் கொண்ட பேச்சுக்கள் பாராட்டுகள், குறும்புச் சேட்டைகள் யாவும் வாழ்வின் படிப்பினைகளாகி ஆன்மீகமும், ஆளுமையும் கொண்ட சிறந்த நிர்வாகியாக உருவாகி வெளிநாடுகளில் உயர் நிலைக்கு மாறிய அந்த நினைவுகள் நிழலாடின. ஆலய வாசலில் கண்பார்வை தெளிவாய் தெரியாத அன்னம்மா பாட்டி பல காலமாக கச்சான் விற்று வந்தாள். அன்னம்மா பாட்டியோ தனது வாழ்வாதாரத்தின் தேவையோடு பிறரில் தங்கி வாழாது உழைத்துண்டு வாழும் முயற்சியோடு தனது நேரப் பொழுதை சிறுவர்களின் உறவாடலில் கரைத்து இன்புற்றாள்.

சிறுவர்களுடைய குறும்புகளால் கண் பார்வைமங்கலான அன்னம்மா பாட்டியின் முயற்சிக்கு பல தடைகள் கூட வந்து போகும். "ஏதோ ஆண்டவன் இருக்கின்றான், சின்ன வயசில நல்ல பிள்ளைகளாக இருந்தா, பெரியவனாக வரும் போது உங்களை மதிப்பாங்க. எல்லாருக்கும் கடவுள் பயம் வேணும்" என புத்திமதிகளைக் கூறிக் கொள்வாள் சிறுவர்களுக்கு. "அன்னம்மா பாட்டி காசுக் கணக்குகளை மனதால் பார்ப்பதில் கெட்டிக்காரி" என பலர் கூறிக் கொள்வார்கள். அவளோ தன் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் போலத்தானே, என உரிமையோடு அன்பைப் பகிர்ந்து கச்சான் வியாபாரத்தை தனது தொழிலாக்கிவிட்டாள். பாடசாலை மாணவ சிறுவர்கள் அன்னம்மா பாட்டியோடு குறும்பு செய்வதுடன் சிலர் உதவியும் செய்வார்கள். சாப்பாட்டுக்கு குடிதண்ணீர் அள்ளிக் கொடுத்தால் கச்சான் கடலை கொடுப்பாள். கச்சான் கடலை, மாங்காய் சீவல்களை கடனாக வேண்டிக் கொள்வார்கள். இதிலே நேசராசாவும், அருள், றெஜி என்ற மூன்று சிறுவர்களும் பாட்டிக்கு அதிகம் பழக்கப்பட்டவர்கள்.

இதிலே நேசராசா என்ற நேசனுக்கு குறும்புகள் அதிகம். இதை அவனது செயல்களே வெளிப்படுத்தும். செல்லாக் காசுகள், பழைய காசுகளை சேகரித்து பாட்டியிடம் கச்சான் வேண்டி சாப்பிடுவதில் அவனது மகிழ்ச்சியும் இரட்டிப்பாகவே இருக்கும். பழைய ஒரு சதத்தை ஒரு ரூபா எனக் கொடுத்து கச்சான் வேண்டிக் கொண்டவன் சில சமயங்களில் தாள் காசுகளிலும் ஏமாற்றுவித்தை காட்டினான். அன்னம்மா பாட்டியை ஏமாற்றிக் கொள்வது அவனுக்கு பொழுதுபோக்காவும் இருந்தது.

அவனது வயதின் வளர்ச்சியில் முதல் நன்மைக்காக மறை ஆசிரியரிடம் செபங்கள் கற்றுக் கொள்ள மாலையில் ஆலயம் வருவான். மறையாசிரியர் மலர் ரீச்சர் மறை வகுப்பில் பாவத்தின் வகைகளை கூறி விளக்கினார். அருள் ரீச்சரிடம் கேட்டான். "ரீச்சர் ரீச்சர் சாவான பாவம் என்டால் என்ன ரீச்சர், சும்மா பாவம் என்டால் என்ன" என வினாவினான். பாவம் என்றால் தவறான காரியங்கள் செய்து மற்றவர்களை ஏமாற்றுதல் பாவம், இதற்கான தண்டனை இறைவனால் வழங்கப்படும். பாவம் செய்யாமல் இருப்பவர்களே யேசுவை பெறவும் தகுதியுடையவர். நீங்களும் அப்படித்தான். அறியா வயதில் திருமுழுக்கின் மூலம் யேசுவோடு இணைந்த நீங்கள், இன்று நற்கருணையை விபரம் அறியும் வயதில் திரு விருந்தாய் பெறுகிறீர்கள். ஆகவே பாவம் செய்யக்கூடாது" என்றார். நேசன் இன்னும் விளக்கமாக கேட்க முற்பட்டான். "ரீச்சர் நாங்க சின்ன பிள்ளைகள்தானே நாங்க செய்யிறது பெரிய பாவம் இல்லைதானே" என கேட்டான்.

"பாவத்தில் சின்னவர், பெரியவர் செய்வதென்றில்லை. தான் செய்வது பாவம் என்று உணர்ந்தும், தெரிந்தும் கனதியான காரியங்களை செய்தால் அவை சாவான பாவம் அதை செய்பவர்கள் யேசுவின் திருவிருந்தின் நற்கருணையை பெறவும் தகுதி இல்லாதவர்களே. அதுவும் பாவம் செய்து திருவிருந்திலும் பங்குபற்றுபவர் தண்டனையை ஓர் நாள் அனுபவித்தே தீருவர். சிறு வயதிலிருந்தே நல்லவராக வாழ வேண்டும்" என்றார் மறை ஆசிரியர்.

நேசராசாவிற்கு கனமாய் அன்னம்மா பாட்டியின் நினைவுகள் மனதுக்குள் உறுத்தியது. ஆனால் ஆசை விடவில்லை. அன்றும் மறைக்கல்வி முடிந்ததும் அன்னம்மா பாட்டியின் கச்சானை வாங்கி சாப்பிட வேண்டும் என்ற ஆவலில் இருந்தான்.

மறைக்கல்வி வகுப்பில் மலர் ரீச்சர் சொன்ன வரிகள் மனதை உறுத்தினாலும் ஆசை விடவில்லை. அன்னம்மா பாட்டியிடம் சென்று 100ரூபா என கள்ளநோட்டு ஒன்றை பொக்கற்றில் இருந்து எடுத்து அன்னம்மா பாட்டியிடம் கொடுத்து பாட்டி நூறு ரூபாவில் பத்து ரூபாவுக்கு கச்சான் தாருங்க என்றான். சிறுவர்களின் பேச்சுக்களின் நம்பிக்கையில் அவளும் தொண்ணூறு ரூபாயைத் தேடி எண்ணிக் கொடுத்தாள். கையில் வாங்கிக் கொண்ட போது மலர் ரீச்சர் மறைக்கல்வியில் கூறிய வார்த்தைகள் மனதில் உறைத்தது. பாவத்திலும் தெரிந்து செய்வதுதான் சாவான பாவம் அதையும் செய்து நற்கருணை எடுப்பது நான் செய்யும் பெரிய சாவான பாவம் என்பது அவனது மனசாட்சியை உறுத்தியது.

ஒரு கணம் மனப் போராட்டம் அவனை உலுப்பியது. "என்ன பாட்டி காசு மாற்றித் தந்திட்டியள். இப்பிடி எண்டா எப்பிடி ஆச்சி லாபம் வரும்" என தன்னிடம் இருந்த பணத்தையும் கச்சானையும் திருப்பிக் கொடுத்தான் நேசராசா. பாட்டிக்கோ இந்த நல்ல செய்தியைக் கேட்டதும், தம்பி ராசா என வாஞ்சையோடு அவனது கையைப் பிடித்து "ராசா உன்ர நல்ல குணத்துக்கு நீ பெரியவனாய் வளர்ந்து நல்லாய் இருப்பாய் என்னை எத்தின பேர் ஏமாத்திப் போட்டுதுகள். நீ ஒருத்தன்தான் இந்த சின்ன வயசிலே இப்பிடி உண்மையை சொன்னாய். ஆண்டவர் உன்னை ஆசீர்வதிப்பார். நீ ஆற்ர பிள்ளை ராசா, உன்ர வீட்ட நான் வருவன்" என்ற வார்த்தைகளைக் கேட்ட நேசராசாவுக்கு தான் முன் செய்த தவற்றை உணர வைத்ததுடன் தன் வாழ்நாளில் இப்படி ஒரு பாராட்டை பெற்ற மகிழ்ச்சி அவனது வாழ்விலே கிடைத்த பெரிய பரிசாக இருந்தது. அதுவே அவனது வாழ்வில் இனி எந்த தவறையும் தெரிந்து செய்வதில்லை என்பதை உணர்த்தியது. அவனது வாழ்வில் ஒரு திருப்புமுனை, புதிய வரலாறானது.

வீட்டில் முதல் நன்மைக்கான ஆயத்தங்கள் தடல்புடலாக இருந்தது. நேசனின் சகோதரர்கள் அண்ணன் தம்பி தங்கை எல்லோருக்கும் தங்கள் வீட்டில் கொண்டாட்டம் என்ற குதூகலம். நேசனின் தாயார் கோவிலால் வந்ததும் நேசனை அழைத்து முத்தமிட்டு சகோதரர்களுக்கு கோவிலில் நடந்ததை விபரித்தாள். அப்பாவும் நானும் கோவிலுக்கு போய்விட்டு வரும்போது அன்னம்மா பாட்டி நேசனின் நல்ல செயலைப் பாராட்டியது எங்களுக்கு பெருமையாய் இருந்தது. அருகில் வந்தவர்களும் நேசனின் உண்மையான நடத்தையைப் பாராட்டினார்கள் என்றாள் தாய்.

இவ் வாழ்த்து வரிகளைக் கேட்ட நேசன் அவனது வாழ்விலே கிடைத்த பெரிய பரிசாக அதனை ஏற்று நிரந்தரமான தீர்மானமாக எண்ண அலைகளில் பதிவாக்கிக் கொண்டான்.

இதுவே அவனது எதிர்கால வாழ்வை நிர்ணயித்தது. தண்டனைகளை விட பாராட்டுகளே மாற்றத்தை ஏற்படுத்தும் என தனது தொழிலகத்திலும் செயல்படுத்தி இன்று உயர் நிலையில் இருக்கும் அவனது நினைவு மீட்டல் அன்றைய சூழலையும் அந்த மாற்றத்திற்கு வித்திட்ட மறை ஆசிரியரின் வழிகாட்டலையும் பாராட்டிப் பக்குவப்படுத்திய அன்னம்மாப் பாட்டியையும் அந்த ஆலய முன்றலில் மீட்டுப் பார்ப்பதில் மெய்மறந்து நின்றான் நேசன்.



# தற்காலச் சூழ்நிலையில் குருக்களின் பணி வாழ்வு

T. அனுஷா

மன்னார் மறைமாவட்டத்தின் இறைபணியின் தலைமகனாம் அதி. வணக்கத்திற்குரிய ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் தற்காலச் சூழ்நிலையில் குருக்களின் பணிவாழ்வானது மிகவும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. எங்கெல்லாம் தேவைகள் அதிகம் இருக்கின்றதோ அங்கெல்லாம் எம் குருக்களின் பணிகளானது சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. எமது மறைமாவட்டத்தில் குருக்களின் தொகையை விட பணிகளே அதிகம் காணப்படுகின்றது. இருந்த போதிலும் குருக்களின் அயராத முயற்சியாலும் கடின உழைப்பாலுமே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்காலச் சூழ்நிலையில் எமது பகுதிகளில் அகதி முகாம்களும் தடுப்பு முகாம்களுமே காணப்படுகின்றது. நாட்டுச் சூழ்நிலைகாரணமாக இந்நிலைகள் எமது உறவுகளுக்கு ஏற்பட்ட போதிலும் மக்களை இறைவிசுவாசத்திலும் இறை நம்பிக்கையிலும் நிலைத்திருக்கச் செய்வதற்காக துன்பங்கள், துயரங்கள் நிறைந்த சூழ்நிலையிலும் கூட குருக்கள் இறைவல்லமையோடும், இறையாசீரோடும் ஒவ்வொரு தடுப்பு முகாம்களுக்கும், அகதிமுகாம்களுக்கும் சென்று மக்களின் ஆன்மீகத் தேவைகளையும் ஏனைய தேவைகளையும் நிறைவு செய்து வருகின்றார்கள். குருக்களின் சந்திப்பினாலும் எம் உறவுகள் இறைவன் மேல் வைத்த விசுவாச நம்பிக்கையின் நிமித்தமுமே விரக்தி அடைந்த வாழ்க்கையில் ஓரளவு மகிழ்ச்சியை அனுபவித்து வருகின்றார்கள்.

போர்க்காலச் சூழ்நிலையில் எம் உறவுகள் "ஷெல்" தாக்குதல்களுக்கும் துப்பாக்கி வேட்டுக்களுக்குமிடையே கஸ்ரப்பட்டு துன்பத்திற்குள்ளாகி, வேதனையோடு உடைமைகளை இழந்து உறவுகளைப் பிரிந்து தஞ்சம் தேடி வரும் போது இரவு பகல் பாராது முன்னின்று பணியாற்றியவர்கள் யார்? தன்னலம் பாராது மக்களின் தேவைகளை நன்கு அறிந்து சாதி, மத, பேதம் பார்க்காது பணியாற்றியவர்கள் யார்? இறை அழைப்பின் குரல் கேட்டு இறைவனுக்காக தம்மையே அர்ப்பணித்த எம் குருக்கள் மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாக்கப்பட்டு அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்ட ஆரம்ப காலகட்டத்தில் உற்ற நண்பனாக துணைநின்ற அயலவர்கள் மூலம் இயேசுவின் பிரசன்னத்தை உணரச் செய்தவர்களும் எம் குருக்களேதான். காலையில் முகாம் வாசலில் காலடி பதித்தால் இரவு வேளையில் தான் தங்களது இருப்பிடம் நோக்கித் திரும்புவார்கள். அதுமட்டும் குருக்களின் பணித்தளம் முகாம். உண்பதற்கு உணவிருந்தும் நேரமில்லாமல் பணியே தங்களது பசிதீர்க்கும் மருந்து என உணர்ந்து செயற்பட்டார்கள். நிமிடம் தோறும் இடைவிடாது இறைவனிடம் மன்றாடி மக்களின் தேவைகளுக்காக பரிந்து பேசியவர்கள் குருக்கள். ஒவ்வொருவரின் மன்றாட்டின் நிமித்தமும் வேண்டுதலின் மூலமும் இன்று ஓரளவு எம் மக்களுக்கு விடிவு கிடைத்துள்ளது. இடப்பெயர்வுக்கு உள்ளாக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவடைந்து தங்களது இல்லிடங்களுக்கு எம் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டு இயல்பு நிலைக்கு திரும்பினாலும் இறைபராமரிப்பும் இறையாசீரும் என்றும் ஒவ்வொரு உள்ளங்களோடும் இருக்க தொடர்ந்தும் இறைவரம் வேண்டுவோம். "பொழுது விடிந்தால் பூசை, பூசை முடிந்தால் மேசை" என்ற காலம் மாறி மக்களின் பணியே தமது பணி என்ற நோக்கோடு குருக்கள் தமது பணியை சிறப்பாக முன்னெடுத்துச் செல்கின்றார்கள். சொகுசு அறை, பஞ்சு மெத்தை என்ற காலமும் மாறிவிட்டது. ஓலைக் குடிசையும், ஓலைப்பாயும் இருந்தால் போதும் என்ற நோக்கோடு தன்னலம் கருதாது வசதிகள் பாராது பணியாற்றி வருகின்றார்கள். மக்களின் வாழ்வு சிறப்பாக இருந்தால் போதும் சுபீட்ஷமான வாழ்வு, மக்கள் வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு தம்மை முழுவதுமாக அர்ப்பணித்து தற்கால சூழ்நிலையில் குருக்கள் ஒவ்வொருவரும் அரும்பணி ஆற்றி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் குருக்களின் ஆண்டைக் கொண்டாடும் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிச் சற்று சிந்திப்போம். குருக்கள் ஒவ்வொருவரையும் இறைவன் பாதம் சமர்ப்பித்து அவர்களின் உடல் உள ஆன்மதேவைகளுக்காக மன்றாடுவோம். குருக்களை சகோதர உணர்வோடு ஏற்று அவர்களின் பணி வாழ்வு சிறப்புற நாமும் உதவி புரிவோம். குருக்களைப் பற்றி விமர்சிப்பதை நிறுத்துவோம். இறையாட்சிப் பயணத்தில் குருக்களோடு சேர்ந்து நாமும் பயணிப்போம். என்றும் எப்போதும் இறைவேண்டலில் உறுதியாக நிலைத்திருப்போம்.

# குருதிச் சுவடுகளின் ஓராண்டு முடிவில்

மரியான் மேரிஷர்மிளா (நிலவு),
நல்லாயன் அருட்சகோதரிகள் இல்லம்,
கணேசபுரம், வவுனியா.



இரத்த ஆறு பாய்ந்தோடிய காலமது. 13.05.2009 காலைப் பொழுது அதிக வெடிச்சத்தத்துடன் வழக்கம்போல் புலர்ந்தது. வழக்கம் போல் மக்கள் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தனர். வீதி எங்கும் மனிதப்பிணங்கள். வீடுகள் தோறும் அவல ஓலங்கள். திரும்பிப் பார்க்கும் திசை எங்கும் புகைமண்டலங்கள்.

காலை 10மணி. என் தோழி பிறேமா தன் குடும்பத்துடன் எமது இருப்பிடம் நோக்கி வந்து சேர்ந்தாள். என் பாடசாலைக் காலம் முதல் என் உற்றதோழி அவளே. என் தோழியின் பெற்றோரும் உடலளவில் இயலாதவர்கள். பிறேமா வீட்டில் மூத்தவள். அவளைவிட இரண்டு பெண் சகோதரிகள். இவள் இந்நேரமும் குடும்பச் சுமையை சுமந்து கொண்டிருந்தாள். நாமிருவரும் நீண்ட நாட்கள் குளிக்கவில்லை. காரணம் பதுங்கு குழியை விட்டு வெளியில் வரமுடியாத நிலை. அன்று ஓரளவு நிலைமை சுமூகமாக இருந்தது. எனவே நாமிருவரும் அயலில் இருந்த கிணறு ஒன்றிற்குக் குளிக்கச் சென்றோம். திடீர் என்று கடும் வெடிச்சத்தங்கள் வானைப்பிளந்தது. எறிகணைகள் எம்மையும் எம் வீட்டையும் சுற்றி விழுந்தவாறு இருந்தது. நாம் இருவரும் அருகில் இருந்த பதுங்கு குழியில் இறங்கிவிட்டோம். 15 நிமிடம் வெளியில் தலைகாட்ட முடியாதவாறு தொடர் எறிகணைவீச்சு.

பின் சிறிது நேர ஓய்வு. நானும் பிறேமாவும் குளித்தபாதி குளிக்காதபாதி வீடு நோக்கி ஓடினோம். எமது வீட்டுப்பக்கம் இருந்து பாரிய அழுகுரல் கேட்டவாறு இருந்தது. ஓடிச் சென்று பார்த்தோம். இறைவா! எப்படிச் சொல்ல அந்தக் கொடூரத்தை. என் தோழி பிறேமாவின் தாய், தந்தை, இரண்டு தங்கை நான்கு பேரும் உடல் சிதறி குருதி வெள்ளத்தில் கிடந்தனர். என் தோழியை என்னால் தேற்றவே முடியவில்லை. அழுதால், புரண்டாள், தன்னை மட்டும் இறைவன் தனிக்கவிட்டான் என்று துடித்தாள். பின்னர் நாங்கள் அவர்களை ஒரு பதுங்குகுழியில் போட்டு புதைத்து விட்டு வேறு இடம் நோக்கி நகர்ந்தோம்.

அன்று முதல் என் தோழியும் என் குடும்பத்தில் ஒருத்தியானாள். 16. 05. 2009 நாங்கள் அனைவரும் வவுனியா நோக்கி நகர ஆரம்பித்தோம். மதியம் 12மணி நாங்கள் எம்மிடமிருந்த காய்ந்த ரொட்டியை உண்பதற்காக ஓர் பனை மரத்தடியில் அமர்ந்தோம். அந்த உணவை எமது அம்மா பகிர்ந்தார். நானும் என் தோழி பிறேமாவும் ஒரு தட்டில் உணவருந்திக் கொண்டிருந்தோம். திடீர் என ஒரு பெரிய வெடிச்சத்தம். நாம் அனைவரும் உணவுத்தட்டுக்களுடன் விழுந்து படுத்தோம். எங்கும் ஒரே புகை மண்டலம் எழுந்து பார்த்த போது நாம் இருவரும் உணவருந்திக் கொண்டிருந்த உணவுத்தட்டில் குருதி குழம்பாய் நின்றது. என் தேவனே அது வேறுயாருடைய குருதியுமல்ல, என்னுயிர் தோழி பிறேமாவின் குருதியது.

என் தோழியோ உயிரற்ற உடலாய் என் கைகளை இறுகப்பிடித்தவாறு என் மடியில் மௌனமாய் படுத்திருந்தாள். நாம் அமர்ந்திருந்த பனைமரத்தடியில்தான் என் தோழியின் உயிர்குடித்த எறிகணை வீழ்ந்து வெடித்திருந்தது. உறவுகளே!

இப்படி எத்தனை எம் உறவுகள் இந்தக் கொடிய போரிலே கொல்லப்பட்டனர். இனி இப்படி ஒரு கொடூரம் எம் வாழ்வில் இனியும் நடந்துவிடக் கூடாது. அன்று யேசு சிலுவை சுமந்த போது யேசுவின் முகத்தை வெரோணிக்கா துடைத்தாள். அப்போது இயேசுவின் முகம் அந்த துணியில் பதிந்தது. இன்று கொடிய போரிலே கொல்லப்பட்ட என் தோழியின் குருதி அன்று நான் அணிந்திருந்த உடையிலும் என் பிஞ்சு நெஞ்சிலும் அழியாத கொடிய சித்திரமாக பதிந்து கிடக்கிறது. தோழர்களே! என் பேனா வெறுமனே என் வேதனைகளை மட்டும் எழுதவில்லை. என் இதயத்தில் பதிந்த என் தோழியின் குருதிச் சுவடுகள். எம் தேசத்தில் எழுதப் பேனாக்கள் இன்றி புதைந்து கிடக்கின்றது. இந்நிகழ்வு நடந்து ஓராண்டாகிப் போனாலும் என் தோழியின் குருதிச் சுவடுமட்டும் பசுமையாக நெஞ்சிலே உள்ளது.

## மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

# புனிதரின் பாதையில்

## புனித மரியகொரற்றி கன்னி, மறைசாட்சி (கி.பி 1890–1902)

ஆடி 06

இவரது புனிதர் பட்டமளிப்பு விழாவுக்கு உலகில் பல பகுதிகளிலிருந்தும் 2,50,000 மக்கள் உரோமைக்கு வருகைதந்தனர். கல்வி கற்குமளவுக்கு இவர் வீட்டில் வசதி இல்லாமல் போய்விட்டது. 12 வயதில் இவருக்கு புதுநன்மை கொடுக்கும் போது கூட, மற்றவர்களை விட ஏழையாக, எளிமையாக இருந்தார். ஆனால் தாய் இவருக்கு ஊட்டி வந்த ஞானச் சத்துணவு மிக உயர்ந்தது. இவர் 20-ஆம் நூற்றாண்டின் புனித ஆக்னஸ் என அழைக்கப்படுகிறார்.

புதுநன்மைக்குப் பின் வாரங்கள் கூட ஆகவில்லை. அலெக்சாண்ட்ரோ ஸெரனெல்லா என்ற 18 வயது இளைஞன் தவறான வழியில் மரியாவை அடைய முனைந்தான். மரியா பாவத்திற்கிணங்க மறுத்து விட்டார். ஆத்திரத்தில் அவன் மரியாவின் மாசற்ற மலர் போன்ற உடலைப் பலமுறை கத்தியால் குத்திக் கிழித்தான். "இது பாவம், இதற்காக நீ நரகத்திற்குப் போவாய்" என்று மரியா அவனை எச்சரித்தும் பயனில்லை. குற்றுயிராய் விடப்பட்ட அவர் மருத்துவ மனையில் 24 மணிநேரம் கழித்து உயிர் நீத்தார். "மன்னித்துவிட்டேன் அவரை" என்று சொல்லிவிட்டுத் தான் மடிந்தார். கொலை பாதகனுக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது. பலகாலமாக மனந்திரும்ப மனமில்லாதிருந்த அவன் எதிர்பாராமல் பாவமன்னிப்பை மன்றாடினான். "மரிய கொரற்றி விண்ணினின்று மலர்களை என் கைநிறையக் கொடுத்ததாகக் கனவு கண்டேன்" என அறிவித்தான். 27 ஆண்டுகளுக்குப் பின்னர் அவனது சிறை வாழ்வுக்கு முற்றுப்புள்ளியிடப்பட்டது. அப்போது மரியாவின் தாயிடம் சென்று மன்னிப்புக் கேட்டான். இந்த அலெக்சாண்ட்ரோ தம் இறுதி நாட்களில் கப்புச்சின் 3ஆம் சபைத் துறவியாக வாழ்ந்து கி.பி. 1970இல் மரித்தார். 50 ஆண்டுகளுக்குள்



மரியாவுக்கு 12ஆம் பத்திநாதர் புனிதர் பட்டம் கொடுத்தார். அப்போது அவருக்கு அருகில் மரியாவின் தாயும், இரு சகோதரிகளும், ஒரு சகோதரனும் உடனிருந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் புனிதர் பட்டம் கொடுப்பதைப் பார்க்க மண்டியிட்டு இருந்த கூட்டத்திலே அலெக்சாண்ட்ரோவும் பங்குபெற்று மகிழ்ச்சிக் கண்ணீர் சிந்தினார்!

**சிந்தனைக்கு**

இந்த நாட்களில் கற்பு என்றால் என்ன என்று அக்கறையின்றிக் கேட்கும் போதும், திரைப்படங்களிலும், சஞ்சிகைகளிலும் ஆபாசக் காட்சிகளைத் தெய்வமாக்கும் போதும், "கற்பே உன் விலை என்ன?" என்று கேட்கும் சூழலில், நாமாகிலும் தூய ஆவியின் ஆலயமாக நம்மையும் பிறரையும் மதிக்கின்றோமா?

சுதேச குருக்கள் தினத்திற்கான (25.06.2010) சிறப்பு கட்டுரை

# “நற்செய்தியை பகிர்ந்து காரிருளை களைந்திடுவோம்”

அருட்பணி றெஜினோல்ட் சபரமாது,
தேசிய இயக்குனர்,
பாப்பிறை மறைபரப்புச் சபைகள்.



“நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன். நீங்கள் கனிதரவும் நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்” (யோவா 15:16). இம்முறை சுதேச குருக்கள், துறவியர் தினம் கொண்டாடும் வேளை அதன் கருப்பொருளாக, எமது உன்னத குருவாம் ஆண்டவர் கூறியதை வெளிப்படுத்துவது பொருத்தமானதாகும் என்பதே என் கருத்து. கிறிஸ்து இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டதன் நோக்கம் யாதெனில், பாவ இருள் சூழ்ந்திருக்கும் இவ்வுலகை ஒளிமயப்படுத்தி, பாவத்தின் நிமித்தம் தனித்து பயணம் செய்துகொண்டிருக்கும் மனிதனை இவ்விருளினின்று மீட்டு ஒளியின் பிள்ளைகளாக மாற்றுவதற்கேயாகும். இதன் நிமித்தம் கிறிஸ்து தாம் விரும்புபவர்களை தம்முடனே இருத்தி, தனது படிப்பினைகளை கற்று உலகிற்கு அனுப்புமுகமாக தேர்ந்துக்கொண்டார். இந் நிகழ்வானது நேற்றைக்கும், இன்றைக்கும், நாளைக்கும், பொருந்தும். கிறிஸ்து தாம் விரும்பியவர்களை அன்று தேர்ந்தெடுத்து நற்செய்தியை பகிர்ந்து உலகின் காரிருளை அகற்ற அவர்களை அனுப்பியது போல் இன்றும், நாளையும் தாம் விரும்புவர்களையே அழைத்து, அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றர். “உலகின் ஒளி நானே என்னை பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார், வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியை கொண்டிருப்பார்” (யோவா 8:12). “நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்” (மத் 5:14) “உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க” (மத் 5:16) கிறிஸ்துவினால் விசேட விதமாக நாம் தேர்ந்தெடுக்கப்பட்டு உலகிற்கு அனுப்பப்பட்டுள்ளோம் என்பதை எமது உள்ளத்தில் ஆழமாக பதித்தல் வேண்டும்.

இம்முறை குருக்கள், துறவியர் தினத்தை கொண்டாடும் வேளை குருக்களுக்காக பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு நிறைவுபெற்றாலும் இன்னமும் அதன் நினைவுகள் எம் மனதை விட்டகலவில்லை. 2009 ஆனி மாதம் 19ஆம் திகதி தொடக்கம் 2010 ஆனி மாதம் வரை “குருக்கள் ஆண்டாக” கருதப்பட முக்கிய காரணம் யாதெனில் கி.பி 1815 ஆம் ஆண்டு பிரான்சில் ஆர்ஸ் என்ற கிராமத்தில் பரிசுத்த வாழ்வு வாழ்ந்து அக்கிராமத்திற்கும் மக்களுக்கும் இருளை அகற்றும் ஒளியாக திகழ்ந்த குருக்களின் பாதுகாவலரான தூய ஜோன் மேரி வியானி குருவினுடைய 150ம் ஜுபிலி ஆண்டாகும். அந்தப் பங்குக்கு அவரை அனுப்பிய அவரின் மறைமாவட்ட தலைமை குருவானவர், “அந்த பங்கில் இறை அன்பு மந்த நிலையில் காணப்படுகின்றது, நீர் சென்று அங்கு சுடர் ஒளிரச் செய்யும்” என்று கூறிய வார்த்தைகளை அவர் நிறைவேற்றினார். இப்பொழுது நாம் மற்றுமொரு ஜுபிலி ஆண்டில் காலடிவைத்துள்ளோம். அதாவது எமது இலங்கைத் தீவில் கத்தோலிக்க விசுவாசத்திற்கு தடை ஏற்பட்ட, கத்தோலிக்க குருவானவர் ஒருவருடைய சேவை கிடைக்கப்பெறாத, இருள் சூழ்ந்த ஓர் காலகட்டத்தில், நம் முன்னோடிகளின் விசுவாசத்தை காத்து, அதை உறுதிப்படுத்தி, இலங்கை தீவில் கத்தோலிக்க திருச்சபையை பாதுகாத்த “இலங்கை அப்போஸ்தலர்” என பெயர் பெற்ற முத்திப்பேறுபெற்ற யோசவாஸ் அடிகளார் இறைபதமடைந்து முன்னூறு ஆண்டுகள் நிறைவு தினமாகும். இவ்விரு குருக்களும் முழு உலகிற்கும், இலங்கைத் திருநாட்டிற்கும் ஒளிச்சுடர் விளக்காய் திகழ்ந்தார்கள். இவர்கள் “உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க” (மத் 5:16) என்ற கிறிஸ்துவின் கட்டளையை செவ்வனே நிறைவேற்றிய முக்கிய இரு தூண்களாவார்கள். நாம் அவர்களை எம் முன்மாதிரிகையாக கொள்வோம்.

எதிர்வரும் காலங்களிலும் இறைவன் தனது இராட்சியத்தில் சேவையாற்ற நற்குணம் படைத்த இளைஞர், யுவதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களின் முன்மாதிரிகையான வழிகாட்டல் மூலமும், நற்செய்தி அறிவித்தல் மூலமும், உலகின் காரிருளை களைந்திட வழிவகுப்பாராக. எனவே நாம் எமது மதிப்பையும் அன்பையும், நன்றியையும், புகழ்ச்சியையும் இறைவனுக்கு சமர்ப்பித்து எந்நேரமும் செபத்தில் நிலைத்திருப்போம். “அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு, எனவே ஆண்டவரே, அறுவடை செய்வதற்கு இன்னும் அதிகமான பணியாளர்களை அனுப்பும்” என்று மன்றாடுவோம். அப்போது “உலகில் ஒளிரும் சுடர்களாகத் திகழ” அவர்களால் முடியும் (பிலி 2:16).

## உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி – 84

இம்மாதம் தெசலோனியருக்கு எழுதப்பட்ட முதலாம் திருமுகத்திலிருந்து வினாக்கள் தொகுக்கப்படுகின்றன.

தெசலோனிக்கா மாசிதோனியா நாட்டின் வடக்கு கடலோரமாக அமைந்திருந்த ஒரு துறைமுகப்பட்டினம். இதன் கிழக்கே 40 – 50 கிலோ மீற்றர் தூரத்தில் அப்பலோனியா துறைமுக நகரமும் மேற்கே 80 – 90கிலோ மீற்றர் தூரத்தில் பெரேயா நகரமும் அமைந்திருந்தன. பிலிப்பியும் நெயாப்பொலி நகரங்களும் கூட இதற்கு அண்மையிலிலேயே இருந்தன. இதனால் இப்பிரதேசங்கள் சனச்செறிவு உள்ளதாகவும் வர்த்தகம் கலைப் பரிமாற்றங்கள் நிகழும் நகரங்களாகவும் இருந்திருக்கும்.

அறிவோ, ஞானமோ, புதிய சித்தாந்தங்களோ வாய் மொழியாகவே மக்கள் மத்தியில் பரவிய – பரப்பப்பட்ட காலங்கள் அவை.

பலஸ்தீனத்திலிருந்து ஆயிரம் கிலோ மீற்றருக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களுக்குக் கிறீஸ்துவை அழைத்துச் சென்ற நற்செய்திப் புறாவாக நாம் புனித பவுலைக் காணலாம். இவரின் இரண்டாம் மூன்றாம் தூதுரைப் பயணங்கள் இந்நகரங்களைத் தொட்டே செல்கின்றன.

பயணங்கள் மட்டுமல்ல, தான் கிறிஸ்துவிடம் அழைத்து வந்த மக்கள் கிறீஸ்துவோடு இறுக்கமான பந்தங்களால் பிணைக்கப்பட வேண்டும், கடவுள் தன்னிடம் தந்த எந்த ஒரு மந்தையையும் தான் இழந்து விடக்கூடாது என்பதில் தீர்க்கமான சிந்தனையோடும் அதற்கான செயற்பாடுகளோடும் இயங்கிய புனித பவுல் உண்மையில் மறையறிவிப்பாளர் ஒவ்வொருவருக்கும் சிறந்த முன் உதாரணமாவார்.

**இனி எமது வினாக்களுக்கு வருவோம்.**

1. புனித பவுல் எழுதிய முதலாவது திருமுகம் இது. இத்திருமுகம் எப்போது எழுதப்பட்டது?
2. இத்திருமுகத்தை யார் எழுதுவதாக புனித பவுல் குறிப்பிடுகின்றார்?
3. தெசலோனிக்கர் நடுவில் கிறீஸ்துவின் நற்செய்தி வெறும் சொல்லளவிலன்றி வேறு எவ்வாறு கொண்டுவரப்பட்டதாக புனித பவுல் கூறுகின்றார்?
4. மனிதர்களுக்கல்ல யாருக்கு உகந்தவர்களாயிருக்க நற்செய்தியாளர் விரும்புகின்றார்?
5. நாம் ஆண்டவர் யேசுவின் வருகையின் போது புனித பவுலடியாருக்கும் அவரோடிணைந்த நற்செய்தி அறிவிப்பாளர்களுக்கும் மகிழ்ச்சியும் பெருமையோடு சூடப்போகும் வெற்றிவாகையுமாய் இருக்கப் போகின்றவர்கள் யார் எனக் குறிப்பிடுகின்றார்?
6. எங்கள் இன்னல் இடுக்கண் நடுவிலும் நாங்கள் ஆறுதல் அடைகின்றோம் என்று ஏன் பவுலடியார் கூறுகின்றார்?
7. தெசலோனிக்கர் எதை மறைபோதகர்களான புனித பவுலடியார் போன்றவர்களிடம் கற்றுக்கொண்டனர்?
8. கடவுளிடமிருந்து மனிதரைப் பிரிக்கும் எந்தப் பாவங்களை விலக்கிவிட வேண்டும் என்று தெசலோனிக்கருக்கு எழுதிய திருமுகத்தில் அடிக்கடி வலியுறுத்தப்படுகின்றது?
9. கடவுள் நம்மை தம் சினத்திற்கு ஆளாவதற்கு அல்லாவிடில் எதற்காக ஏற்படுத்தியுள்ளார்?
10. எதைத் தடுக்க வேண்டாம் எதைப் புறக்கணிக்க வேண்டாம் என வலியுறுத்தப்படுகின்றது?

## மன்னார் கல்வி வலயச் செய்தி

# வட மாகாண மட்ட தமிழ் மொழித் தினப்போட்டிகள்

தகவல் : திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட்,
உதவி கல்வி பணிப்பாளர் (தமிழ்), மன்னார் கல்வி வலயம்.

மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளுள் தமிழ் மொழித்தினப் போட்டிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். கடந்த இரண்டு தவணைகளிலும் பாடசாலை மட்டம், வலய மட்டம் மற்றும் மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற தமிழ்மொழித் தினப் போட்டிகளில் முதலிடங்களைப் பெற்ற தனி, குழு நிகழ்ச்சிகள் மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டன. வட மாகாண மட்ட தமிழ்த்தினப்போட்டிகள் 12 வலயங்கள் உட்பட 5மாவட்ட மாணவர்களுக்கு யாழ் / வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றன. இப்போட்டிகளில் மன்னார் மாவட்டத்திற்கு 5 முதலிடங்களும் 8 இரண்டாம் இடங்களும் 13 மூன்றாமிடங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் மன்னார் கல்வி வலயத்திற்கு மாகாண மட்டத் தமிழ்மொழித்தினப் போட்டிகளில் 4 முதலிடங்களும் 6 இரண்டாமிடங்களும் 11 மூன்றாமிடங்களும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு மாகாண மட்ட எழுத்தாக்கப் போட்டிகளில் ஒரு முதலிடத்தையும் இரு இரண்டாமிடங்களையும் ஐந்து மூன்றாமிடங்களையும் பங்குபற்றிய பாடசாலைகள் பெற்றுள்ளன.

2010ம் ஆண்டிற்கான மாகாணமட்டத் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் மன்னார் வலயம் மொத்தமாக 29 இடங்களை பெற்றுக் கொண்டதையிட்டு வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.எம்.ஏ. றெவ்வல் அவர்கள் மகிழ்ச்சி தெரிவிப்பதுடன் தனது பாராட்டையும் தெரிவித்து நிற்கின்றார். இப்பெருமைக்குரிய பெறுபேறுகளை ஈட்டித்தந்த மாணவர்களையும் போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து பாடசாலை சமூகத்தையும் ஒத்தாசை புரிந்த வலயக்கல்வி சமூகத்தையும் தமிழ் மொழிக்குப் பொறுப்பாகவுள்ள உதவிக்கல்விப் பணிப்பாளர் நன்றியுடன் நினைந்து பாராட்டு தெரிவிக்கின்றார்.

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 82 இற்கான கேள்விகளுக்கு 24 பேர் விடையளித்திருந்தனர்

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**J. ஆன் ரொசானி, செக்குப்பிட்டி, கெக்கிராவ.**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள**

1. வி. மேரி றெஜினா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
2. பி. நியோமி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
3. ம. யூடிற்ரா, இல. 5/4, அச்சுக்கூட ஒழுங்கை, சுண்டிடுக்குளி, யாழ்ப்பாணம்.
4. வி. மேரி கலிஸ்ரா, 5ம் வட்டாரம், விடத்தல் தீவு.
5. திருமதி. அருமைத்துரை லூர்த்துநாயகி, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், மன்னார்.
6. யே. றொகாந்தி, பிடாரிகுளம், முருங்கன்.
7. ச. கிஷோ ஷாளினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
8. செ. மேரி நிலோஜா, தரம்-12, கன்னாட்டி, அடம்பன்.
9. அ. மரிய சுதர்ஷனா, ப. துட்டுவாகை, நேரியகுளம்.
10. கிறிஸ்ரீன் பிறைட்டன், இல.14, முகத்தான்குளம், செட்டிகுளம், வவுனியா.

## நேரம் ஒதுக்குங்கள்



வாழ்க்கையை முழுவதும் அனுபவிக்க நேரம் ஒதுக்குங்கள்
இது வெற்றியின் இரகசியம்

வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது மெய்யறிவின் மூலதத்துவம்

விளையாடுவதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது இளமையின் இரகசியம்

நட்பாக இருக்க நேரம் ஒதுக்குங்கள்
இது மகிழ்ச்சியின் பிறப்பிடம்

இறைவனுக்கு நேரம் ஒதுக்குங்கள்
இது ஒன்றே வாழ்வின் நிலையான முதலீடு

தியானம் செய்வதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது மனவலிமையின் எழுச்சி

பிரார்த்தனை செய்ய நேரம் ஒதுக்குங்கள் இறைவன் உங்கள் உள்ளத்தில் சங்கமம்

யே. டொண்சி, மாவிலங்கேணி, முருங்கன்.

## உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி - 82 இற்கான சரியான விடைகள்

(பிலிப்பியர் 1-4)

1. கிறீஸ்துவை
2. வாழ்ந்தால் கிறீஸ்துவுக்காகப் பயனுள்ள பணி செய்யமுடியும் என்பதால் (1:22)
3. ஒரே எண்ணமும் ஒரே அன்பும் ஒரே உள்ளமும் கொண்டவராய் திகழ்ந்து ஒரே மனத்தவராய் வாழவேண்டும் என்று கூறுகின்றார் (2:2)
4. சாவை ஏற்கும் அளவிற்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவிற்கு கீழ்ப்படிந்து தம்மைத் தாழ்த்தினார் (2:8)
5. திமோத்தேயு (2:19-22)
6. இஸ்ரவேல் இனத்தவர், பெஞ்சமின் குலத்தவர், எபிரேயப் பெற்றோருக்குப் பிறந்தவர்.
7. ஆண்டவராம் கிறீஸ்துவைப் பற்றிய அறிவே தான் பெற்ற ஒப்பற்ற செல்வம் என்கிறார் (3:8)
8. கிறீஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்வதற்கு (3:8)
9. அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறீஸ்துவோடு இணைந்துள்ள உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும் (4:6)
10. உண்மையானவற்றை, நேர்மையானவற்றை, கண்ணியமானவற்றை, தூய்மையானவற்றை, விரும்பத்தக்கவற்றை, பாராட்டுக்குரியவற்றை, நற்பண்புடையவற்றை, போற்றுதற்குரியவற்றை மனதில் இருத்தும்படி கேட்கின்றார்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.97 எசேக்கியேல் 33-40

உங்கள் விடைகளை 15.08.2010க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | ★ | | 03 | | | | | | | |
| | 04 | | | ★ | | ★ | | | 05 | |
| | | 06 | | | 07 | | | | | |
| | | | 08 | | ★ | | ★ | 09 | | |
| 10 | | | | | 11 | | 12 | | | |
| | | | 13 | | | 14 | ★ | | | |
| | | | | 15 | | ★ | ★ | | 16 | |
| | 17 | | | | 18 | 19 | | | | 20 |
| | | 21 | | | 22 | | | | 23 | |
| 24 | | | | 25 | | | | | ★ | |

### இடமிருந்து வலம்

1. நான் உன்னை இஸ்ரயேல் வீட்டாருக்குக் ........................ ஏற்படுத்தியுள்ளேன்.
3. நீ இரத்தம் சிந்துதலை .......... அது உன்னைத் தொடரும்.
6. யூதாவுக்கும் அவனோடு சேர்ந்திருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் ........................ (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது).
7. நல்ல .................... நிலத்தில் அவற்றை மேய்ப்பேன்.
12. மக்களினங்களின் வசை ........................ நீங்கள் சுமக்கிறீர்களே.
19. எல்லாப்பறவைகளையும் எல்லாக் காட்டு.................... களையும் அழைத்துச் சொல்.
24. அவர் ........................ களை அளந்தார்.
25. வாயிலைச் சுற்றியிருந்தவற்றின் அதே ........................க் கொண்டிருந்தன.

### மேலிருந்து கீழ்

1. ........................ வற்றிற்குக் கட்டுப்போடவில்லை.
2. காட்டு .................... நாட்டினின்று வெளியேற்றுவேன்.
4. பல நாள்களுக்குப்பின் நீ .................. அழைக்கப்படுவாய்.
6. எங்கள் எலும்புகள் ........................போயின.
9. ........................ மீண்டும் கட்டியெழுப்புவேன்.
10. அவர்களைச் சுற்றிலும் ஒரு சாண் அளவுள்ள ............ பொருத்தப்பட்டிருந்தன.
11. ஒவ்வொருவரின் .................... தம் தோழருக்கு எதிராய் இருக்கும்.
13. பாதுகாப்பாய் ........................ எல்லார் மீதும் நெருப்பை அனுப்புவேன்.
20. அதற்குத் தெற்கே ஒரு ........................ போன்ற கட்டடங்கள் காணப்பட்டன.

### வலமிருந்து இடம்

2. தீயோர் சாகவேண்டும் என்பது என் .................... அன்று.
5. அவர்கள் ........................ப் பெருகுவர்.
11. உங்கள் மூதாதையர் வாழ்ந்ததுமாகிய நாட்டில் அவர்கள் ........................ .
18. அவற்றில் ........................ ஏற்பட்டு சதை தோன்றித் தோல் அவற்றின் மேல் மூடியது.
21. நான் என் ........................ வெளிப்படுத்தும் அந்நாள் அவர்களுக்குச் சிறப்பான நாளாய் இருக்கும்.
22. வாயிலருகே உள்ள புகுமுக மண்டபத்தில் ஒவ்வொரு பக்கமும் இரு........................கள் இருந்தன.
23. என் ........................ அவர்களிடமிருந்து திருப்பிக் கொண்டேன்.

### கீழிருந்து மேல்

7. ஆயர்கள் மந்தையையன்றோ.................... வேண்டும்.
8. நீ ........................ போல் முன்னேறி மேகம் போல் நாட்டை மூடுவாய்.
6. உடனே அவர்களுக்குள் .................... மூச்சுப் புகுந்தது.
14. நீங்கள் அவர்களுக்கு உரிமைச் ........................ இருப்பீர்கள்.
15. இஸ்ரயேல் மலைகளில் நீ .................... (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன).
16. உங்கள் ........................ மிதிக்கப்பட்டதை என் மந்தை உண்ண வேண்டுமா?
17. வாயில் ........................ இல்லை.
20. உன் ........................ இடிபாடுகளாய் மாற்றுவேன். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன).

## 1ம் பக்க தொடர்ச்சி..........
## இயேசுவின் திருவுடல்.........

மன்னார் புனித மரியன்னை ஆலயத்தில் மாலை 4.00மணிக்கு திருப்பலியை தொடர்ந்து ஆரம்பமாகிய இந்நற்கருணைப் பேரணி மன்னார் வைத்தியசாலை வீதி வழியாக நகர்ந்து பனங்கட்டுக் கொட்டு கடற்கரை வீதியூடாக டெலிகொம் சந்தியை சென்றடைந்து. மன்னார், தாழ்வுபாடு வீதி வழியாக புனித செபஸ்ரியார் பேராலயத்தை வந்தடைந்தது. புனித வளனார் மாணவர் இல்ல சந்தி, வைத்தியசாலை சந்தி, டெலிகொம் சந்தி ஆகிய மூவிடங்களிலும் அலங்கரிக்கப்பட்ட தரிப்பிட மேடையமைக்கப்பட்டு நற்கருணை ஆராதனைகளும், மறையுரைகளும் ஆசீர்வாதங்களும் வழங்கப்பட்டன. தரிப்பிடங்களில் ஆராதனைகள், மறையுரைகளை அருட்பணி செபஸ்ரியன் அ.ம.தி ஆற்றினார். கிறிஸ்தவ மக்களின் நற்கருணை வாழ்வு எவ்வாறானதாக அமைய வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். ஈற்றில் பேராலய தியான மண்டபத்தில் மறைமாவட்ட ஆயர் அதி.வண. இராயப்பு யோசப் அவர்களால் நற்கருணை ஆசீர் வழங்கப்பட்டதுடன் இப்பேரணி நிறைவுற்றது. அந்நாளிலும் அடுத்து வந்த ஏனைய நாட்களிலும் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் நற்கருணை பேரணிகள் நடைபெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## 1ம் பக்க தொடர்ச்சி..........
## திருப்பு முனை மையத்தின் ........

இப்பொது அமர்வின் பிரதம அதிதியாக மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவண. கலாநிதி இராயப்பு யோசேப்பு அவர்களும் சிறப்பு அதிதிகளாக மன்னார் மாவட்ட நீதவான் உயர்திரு. யூட்சன், மன்னார் அரச அதிபர் உயர்திரு. நீக்கிலாப்பிள்ளை ஆகியோருடன் குருக்கள் சிலரும், அருட்சகோதரிகள் சிலரும் கலந்து சிறப்பித்தனர். சமூக தீமைகளுக்கு எதிரான மகஜர் வாசிக்கப்பட்டு பிரதம, சிறப்பு அதிதிகளுக்கு திருப்புமுனை இயக்குனர் அருட்பணி வின்சன்ட பற்றிக் அ.ம.தி அவர்களால் கையளிக்கப்பட்டது. சிறப்பு விருந்தினர்கள் தமது உரைகளில் திருப்பு முனை மையத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வினை பெரிதும் பாராட்டி அனைவரும் சமூக தீமைகள் ஒழிப்பிற்கு பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற அழைப்பினை விடுத்தனர். மன்னார் ஆயர் அவர்கள், சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தினத்தின் பின்னணி பற்றி எடுத்துக் கூறி நிகழ்வின் ஏற்பாட்டாளர்களை மெச்சினார். அதன் பின்னர் விழிப்புணர்வு கலை நிகழ்வுகளுடன் பொது அமர்வு முடிவுற்றது.

## மன்னாவின் விலை

மன்னாவின் விலை ரூபா 30 ஆகும். உரிய காலத்தில் பணத்தை செலுத்தி எமக்கும் விநியோகஸ்தர்களுக்கும் ஒத்துழைப்புத் தாருங்கள்.

### மன்னா ஆண்டுச் சந்தா விபரம்

**உள்நாடு: ரூபா 600 (இலங்கை ரூபா)**

**வெளிநாடு: ரூபா 3000 (இலங்கை ரூபா)**

சந்தாப் பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.

**காசோலை மூலம் செலுத்துவதாயின்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltp. (Mannar Branch)

பணம் பெறுபவரின் பெயர் "The Manager - MANNA"

வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No. 020020029782

## நீத்தார் நினைவு, பிறந்தநாள், திருமண யூபிலி போன்றவற்றை பிரசுரித்தல்

நீத்தார் நினைவுகள் கறுப்பு வெள்ளை நிறத்தில் மட்டுமே பிரசுரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**பிரசுர கட்டணமாக ரூபா 4000** அறவிடப்படும் பிறந்தநாள், திருமண யூபிலி போன்றவை கறுப்பு வெள்ளை நிறத்திலும் பல நிறத்திலும் பிரசுரிக்கப்படும்.

**கறுப்பு வெள்ளை நிறத்தில்: ரூபா 4000**

**பல நிறத்தில் : ரூபா 7000**

உங்கள் விடயங்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக விடயங்களை அனுப்பவேண்டும்.

- மன்னா நிர்வாகம்.-

**உங்கள் கவனத்திற்கு!** மன்னாவிற்கு கடிதங்கள். ஆக்கங்கள். போட்டிக்கான பதில்கள் அனுப்பும் போது உங்கள் பெயர். விலாசமிட மறக்க வேண்டாம். ஒரு சில கடிதங்கள் முகவரியில்லாமல் வருகின்றன. கவிதைகள். கட்டுரைகள். சிறுகதைகள். இறைவார்த்தையின் சிந்தனைகள் என பலதரப்பட்ட விடயங்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். தயங்காமல் அனுப்பி வையுங்கள் தரமறிந்து பிரசுரிப்போம்.

- பதிப்பாசிரியர் -

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 95ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:

**ஞா. டயானி**

அளவக்கை, முருங்கன்.

இரண்டாம் பரிசு:

**வ. கரண்**

மூர் வீதி, மன்னார்.

மூன்றாம் பரிசு:

**S. நிஷாந்தினி கூஞ்ஞ**

8ம் வட்டாரம், பேசாலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 107 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 104 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 95ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. அருட்சகோதரி. S. அகுஸ்தீனாள் சி.ஐ.சி, மன்னார்.
2. செ. மேரி ஜெசில்டா, மடுக்கோவில், மடு.
3. அ. மேரி கொண்சலீனா, மடுக்கோவில், மடு.
4. க. றகுநாதன், மன்/அடம்பன் ம.ம.வி.
5. ச. கிஷோ ஷாளினி, பொன்தீவு கண்டல், முருங்கன்.
6. இ. ஜேசுராஜ், போயிட்டி, இளவாலை.
7. பெனிற்றா யோசவ் அன்ரன், சில்லாலை, பண்டத்தரிப்பு.
8. ஏ. பிரியா, கற்கிடந்தகுளம், முருங்கன்.
9. சி. அகஸ்ரா, சமயபுரம், உயிலங்குளம்.
10. பி. றெமுந்துப்பிள்ளை, கங்காணிதீவு, நானாட்டான்.
11. க. பேபி சரோஜா, பாலைக்குளி, அடம்பன்.
12. பத்திநாதன் சுஜாந்தினி, தேவன்பிட்டி பங்கு, மன்னார்.
13. ஏ. மதுசீகன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
14. 2/51, அபிகாயில் பெரியகமம், மன்னார்.
15. சே. நிரோஷினி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
16. க. மடோனா, தி. கு. க, இறம்பைக்குளம், வவுனியா.
17. அருட்சகோதரி பவித்ரா, கார்மேல் மடம், இல:88, கொழும்பு–10.
18. ஜே. எக்ஸ்சல்லென்சி, காத்தான்குளம், வட்டக்கண்டல், மன்னார்.
19. திருமதி. T.S. லீலாவதி, இல. 76/100, சாந்திபுரம், மன்னார்.
20. செ. மேரி நிலோஜா, கன்னாட்டி, அடம்பன், மன்னார்.
21. அ. லூர்த்துநாயகி, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், மன்னார்.
22. மே.பி.றோ. கிறிஸ்ரோபர், 18, கோவில் வீதி ஒழுங்கை, யாழ்.
23. க. றெஜினோல்ட், கற்குளம் - 02, சிதம்பரபுரம், வவுனியா.
24. ம. மத்தியூஸ் குருஸ், அரிப்பு, சிலாபத்துறை.
25. ஜெனோஷன் ஆண்டு7, முள்ளிக்குளம், மறிச்சிக்கட்டி.
26. எ. ஜெ. வியானி, தரகன்கோட்டை, மன்னார்.
27. நிகால் டிக்சன், கொன்னையன் குடியிருப்பு, மன்னார்.
28. நோ. ஜெக ஜீவன் றோச், புனித லூசியா ம. வி, பள்ளிமுனை.
29. ஜோ. ஜீவந்தினி, தரம்-04, தலைமன்னார் ஸ்ரேசன், தலைமன்னார்.
30. அ. இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
31. ம. நீசாராசமலர் குருஸ், (ஆசிரியை), அரிப்பு, சிலாபத்துறை.
32. ம. மேரிசர்மிளா, நல்லாயன் அருட்சகோதரிகள் இல்லம், வவுனியா.
33. வி. வேஜின் டிலக்சனா, இல.143, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
34. அ. கிறிஸ்ரின் தர்சனா, துட்டுவாகை, நேரியகுளம்.
35. திருமதி. வதனி அருள்நாதன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
36. B. J. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
37. இ. தர்சினி, போயிட்டி, இளவாலை.
38. Sr. மரிய அஜந்தா, 393,கார்மேல் மடம், இறம்பைக்குளம், வவுனியா.
39. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
40. மு. யோகராஜா, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
41. ம. கெவின் அன்ஸ்கர், பொன்தீவு கண்டல், முருங்கன்.
42. ஜெ. பிரவீன், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
43. அ. ஸ்டெலா மேரி, இல. 51, துட்டுவாகை, நேரியகுளம்.
44. சே. நிஷாந்தினி, ஆண்டார்செட்டிவெளி, நானாட்டான்.
45. வசந்தி பேரின்பநாயகம், "வசந்தம்", ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
46. Y. டெஸ்மன், மன்/புனித சவேரியார் ஆண்கள் தே. பா. மன்னார்.
47. அ. மேரி ஜஸ்மின், தி.கு.க.ம, இறம்பைக்குளம், வவுனியா.
48. கொ. அனுஷா, ப.துட்டுவாகை, நேரியகுளம்.
49. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
50. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 95 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ[1] | டை | யா | ள | ம் | து | ந் | ழ் | கி | நெ | கை[2] |
| ழை | ய | கி | ங் | ற | இ[3] | து | ந் | றி | அ[4] | நி |
| க் | கு | க் | ம் | ற் | ✲ | ய் | யா | வ[5] | ழி | றை |
| க | க் | மா | க | தோ[6] | ன் | றி | ற் | று | க் | ய |
| பி[7] | பு | ய | க[8] | ட் | டை | ✲ | ம் | ரோ | க | து[9] |
| ற | ப் | வ[10] | ட | க் | கு | பு | ப் | கி | ச[11] | டை |
| ந் | ரு | ள | பி[12] | ன் | னா | ல் | ✲ | சி | க் | த் |
| த | நெ[13] | ரு | ப் | பா | ல் | ✲ | [14] | ட் | க | து |
| ந் | ரு | ம் | ✲ | ✲ | ல் | யி | லை | கா[15] | ர | ✲ |
| ட | ப் | ம் | னு | யி | ஆ[16] | ற் | றோ | ர | ம் | தி |
| கி[17] | பு | ப[18] | ழ | மொ | ழி | க் | கு | ✲ | ✲ | நீ[19] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.96ற்கான முடிவுகளை 2010ம் ஆண்டு ஓகஸ்ட் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# நீங்காத நினைவுகள்

## 24ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
20
04
1916

உதிர்வு
10
03
1986


### பிலிப்புப்பிள்ளை திருச் செல்வம்

(சகாய வீதி, அடம்பன்)

எம் அன்புத் தந்தையே, இவ்வுலகில் எமக்காய் வாழ்ந்து எம் இன்ப துன்பங்களை நீரே எமக்காய் சுமந்து பண்போடு இவ்வுலகில் வாழவைத்தீர். இறைவனின் நிலை வாழ்வில் அமைதி பெற அருள் வேண்டி நித்தமும் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 30ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
06
03
1955

உதிர்வு
15
07
1980

### திருச் செல்வம் டோமினிக்

(சகாயவீதி, அடம்பன்)

விண்ணிலே நீ சென்று வாழ்ந்தாலும் எம் கண்ணுக்குள் நிறைந்திருப்பாய் என் மகனே. களங்கமில்லா உன் முகத்தை நாம் எப்போது காண்போம்? எம் இல்லத்தில் நீ மறைந்து முப்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உம் உள்ளம் நிறைந்த பாசமதை எம் நெஞ்சமென்றும் மறவாது. உம் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
அம்மா, சகோதரர்கள், மைத்துனர்கள், மனைவி,
பிள்ளை, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
18
07
1962

உதிர்வு
29
06
2000

### மனுவேற்பிள்ளை யூயின் (அன்ரன்)

(பறப்பாங்கண்டல்)

*"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"*

பாரில் வாழ்வது பாவம் என்றா
பரமன் உம்மை அணைத்திட்டான்?
மாறுமோ இதயத்தின் காயங்கள்
மீண்டும் புலரும் பொழுதுகளில் பூவுள்ளத்தோடே மீண்டும்
நீர் எப்பொழுது மலர்வாய் எம் வீட்டிலே?
இறைவனின் பசுமைதனில் இணைந்திருப்பீர் என்றென்றும்

பிரிவால் துயருறும்
அண்ணன், மைத்துனி, பெறாமக்கள், மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
18
09
1951

உதிர்வு
02
07
2009

### சந்தாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை


(சகாயவீதி, அடம்பன்)

*நீதிமான்கள் உரிய காலத்திற்கு முன் இறந்தாலும் இளைப்பாற்றியடைவார்கள் (சா.ஞா. 4:7)*

உங்களுடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
அக்கா, மருமக்கள்மார், மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
07
11
1947

உதிர்வு
15
07
2003

### அமரர் திருச்செல்வம் கிருபாநிதி

(முதலைகுத்தி, உயிலங்குளம்)

*"வாழ்வில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"*

உயிர்ப்பின் பூக்களாய் எமை ஆக்கி நல் உணர்வுகளை ஊட்டி வளர்த்தீர். ஏழாண்டு போனதையா எமைப் பிரிந்து. ஐயா உடலால் எம்மைப் பிரிந்து என்றும் உள்ளத்தால் உணர்வுகளால் என்றும் எம்முடன் வாழ்கின்றீர். உம் நினைவுகளை நனவாக்கி உம் தடத்தினில் நிறைவோடு வாழ்ந்திடுவோம் அருள் சொரிவாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
20
01
1947

உதிர்வு
18
07
2004

### அமரர் பறுனாந்து அந்தோனிப்பிள்ளை (பாலசிங்கம்)

(ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர், முருங்கன் கமம், முருங்கன்)

*"மண்ணுலகில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"*

எங்கள் அன்புத் தெய்வமே ஐயாவே! ஆண்டுகள் ஆறு ஆனாலும் ஆறிவிடுமா எம் சோகம். இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம் வழி காட்டிய குலவிளக்கே. ஐயாவே, உங்கள் நினைவுகள் எம் உள்ளங்களை விட்டு அகலவில்லையே. உங்கள் சிரித்த முகம் நோக்கும் போது கண்கள் கசிகின்றன. ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு அமைதியில் நீங்கள் உறங்குகின்றீர்கள். ஐயா, ஐயா என்று ஆயிரம் முறை உங்களை அழைத்தாலும் உங்கள் குரல் எங்கள் காதுகளை எட்டவில்லையே. உங்கள் ஆசைமுகம் காண கண்களில் கண்ணீர்த் துளிகளோடு கலங்கி நிற்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
01
10
1940

உதிர்வு
15
07
2009

### ச. செபஸ்ரியான் ஞானம் குலாஸ்

(பேசாலை)



பாசமுள்ள உறவுகள்
பரிதவிக்க பரலோகம் சென்று
பன்னிரெண்டு மாதங்கள் ஆயினும்
பதை பதைக்குது எம் நெஞ்சம்
பக்தியையும் பண்பையும் எம்மில்
வித்திட்டு சென்ற தந்தையே!
விண்ணிலிருந்து மன்றாடும்
விசுவாச நெறியில் நாங்கள்
விளைநிலங்களாக என்றும் வாழ்வதற்கு

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

## வாழ்க்கை

☞ வாழ்க்கை ஓட்டப் பந்தயம் போன்றது அதில் ஜெயம் கொள்ள வேண்டும்

☞ வாழ்க்கை கண்ணாடி போன்றது கவனமாக கையாள வேண்டும்.

☞ வாழ்க்கை அழகான தோட்டம் போன்றது பராமரிக்க தெரிய வேண்டும்.

☞ வாழ்க்கை ஆற்று வெள்ளம் போன்றது அதில் எதிர் நீச்சல் போட கற்றுக் கொள்ள வேண்டும்.

☞ வாழ்க்கை கோலம் போன்றது கலைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பி. பிறின்சி லியோன்,
அரிப்பு, சிலாபத்துறை, தரம் - 06

# மன்னா

## சிறுவர் பொழிவு

### விவிலிய சிறுகதை

## தண்ணீரிலிருந்து குழந்தை (வி. ப. நூல் 2:1-10)

எகிப்தியரின் அடிமைகளாக இஸ்ரயேலர் இருந்த போதே மோசே பிறந்தான். எகிப்தியர் இஸ்ரயேல் மக்களை கொடுமையாய் நடத்தி வேலை வாங்கினார்கள். அவர்கள் கடினமான வேலை செய்தாலும் பலசாலிகளாக திரளான எண்ணிக்கையில் பெருகிப் பரவினர். அவர்கள் தன்னை மேற்கொண்டு ஆட்சி செய்வார்களென பயந்த மன்னன் பிறக்கும் ஒவ்வொரு எபிரேய ஆண் பிள்ளையையும் நைல் நதியில் போடவும், பெண் பிள்ளைகளை உயிரோடே வைக்கவும் மருத்துவப் பெண்களுக்கு கட்டளையிட்டான்.

இந்நேரத்தில் மோசே பிறந்தான். அவன் தாய் அது அழகுள்ள குழந்தை எனக்கண்டு, குழந்தையை நதியில் போட்டு விட மனதில்லாதிருந்தாள். அவள் அக்குழந்தையை மூன்று மாதம் வரை ஒளித்து வைத்திருந்தாள். ஆனால் நாளுக்குநாள் அக்குழந்தையின் அழுகையும், சிரிப்பும் சத்தமாய் விளங்க ஆரம்பித்ததும் அதனை ஒளித்துவைக்க முடியாமல் போயிற்று. அவள் ஒரு நாணற்பேழை செய்து தண்ணீர் உட்புகாதவாறு அதன்மீது நிலக்கீலும் கீலும் பூசி, அதனுள் குழந்தையை வைத்து நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். குழந்தைக்கு என்ன ஆகுமோ என்பதை அறியும்படி, குழந்தையின் சகோதரி தூரத்தில் நின்றுகொண்டிருந்தாள்.

அரசனின் மகள் நதியில் நீராட வந்தபோது சடுதியாக அவள் நாணலுக்குள்ளே இருந்த பேழையைக் கண்டு, தன் தோழி ஒருத்தியை அனுப்பி அதைக் கொண்டு வரும்படி செய்தாள். இளவரசி அதனை திறந்தபோது ஓர் ஆண்குழந்தையைக் கண்டாள். குழந்தை அழுதது. அவள் அதன் மேல் இரக்கமுற்றாள். "இது எபிரேயக் குழந்தை" என்றாள். அப்பொழுது அதன் சகோதரி அவளிடம் "குழந்தையை பராமரிப்பதற்கு எபிரேய பெண்ணொருத்தியை அழைத்துக்கொண்டு வரட்டுமா?" என்றாள். அதற்கு அவள் "சரி, சென்று வா" என்றாள். அவள் போய் அந்தக் குழந்தையின் தாயையே அழைத்துக் கொண்டு வந்தாள். இளவரசி அந்தப் பெண்ணிடம் "நீ இந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டுபோய், அதை எனக்காக வளர்த்திடு, நான் உனக்கு கூலி தருகிறேன்" என்றாள். அந்தத் தாய் குழந்தையை எடுத்துக் கொண்டு போய் பராமரித்தாள்.

அந்தக் குழந்தை வளர்ந்த போது அவள் அதை மறுபடியும் அரண்மனைக்கு கொண்டுபோய் விட்டாள். இளவரசி அவனை தனது சொந்த மகனெனக் கொண்டாள். அவள், அவனை நீரிலிருந்து எடுத்ததால் அவனுக்கு "மோசே" என்று பெயரிட்டாள். கடவுள் பல திட்டங்களை மோசேக்கு வைத்திருந்தார். அவன் ஒரு தலைவனாகி இஸ்ரயேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வழிநடத்தினான்.

**படிப்பினை :** கடவுள் எங்கள் வாழ்க்கையைக் குறித்து ஒரு திட்டத்தை வைத்திருப்பதால், அவர் எங்களில் அதிக அக்கறையுள்ளவராயிருக்கிறார்.

### பாலகரே! உங்கள் கைவண்ணத்தை இங்கே காட்டுங்கள்



சிறுகதைக்கு பொருத்தமான இப் படத்தை உங்கள் கலைநயத்திற்கேற்ப நிறந்தீட்டி மகிழுங்கள்

## 1 வது பிறந்த நாள் வாழ்த்து




மன்னார் சின்னக் கடையில் வசிக்கும் வினோத் பீரிஸ் சஸ்ரினா தம்பதிகளின் செல்வப் புதல்வி மெஜிரின் பீரிஸ் தனது முதலாவது பிறந்தநாளை 09.07.2010 வெள்ளிக்கிழமையன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, கிரான்பா, கிரான்மா, பப்பா, மம்மா, சூட்டி மாமி, றொஹான் மாமா,டிக்னிற்றா மச்சி, அமெரிக்காவில் வசிக்கும் கமலி சித்தி, அனந்தன் சித்தப்பா, நிதர்ஷன் அண்ணா, ஆரதி அக்கா, லண்டனில் வசிக்கும் தொட்டப்பா, தொட்டம்மா மற்றும் உற்றார் உறவினர், குழந்தை இயேசுவின் அருள் பெற்றுநலமுடனும் வளமுடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.


## இறுவட்டு வெளியீடு

அமதிகள் கலைத் தொடர்பகத்தின் வெளியீடாக அருட்பணி. விமல் அ.ம.தி. அவர்களின் "தாயே தஞ்சம் நீயே" எனும் இறுவட்டு 15.05.2010 அன்று திருமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பாலையூற்று பங்கிலே வெளியிடப்பட்டது. இந்நிகழ்விற்கு அருட்பணி. அந்திரியாஸ் அ.ம.தி. அவர்கள் தலைமை தாங்க அருட்பணி. தேவராஜ் அ.ம.தி. (வவுனியா அமதிகள் கலைத்தொடர்பக இயக்குனர்) அவர்கள் வெளியீட்டுரை வழங்கினார். இவ்விறுவட்டு வெளியீடு நிகழ்வுக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.கி. முருகுப்பிள்ளை பிரதம விருந்தினராகவும் திரு. மு. பேர்ணாட் (பீடாதிபதி, வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி) அருட்பணி. ஜீவனதாஸ் அ.ம.தி. (அதிபர், புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை) அருட்சகோதரி பவளராணி அ. கா (அதிபர், சென் மேரிஸ் கல்லூரி) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். இந்த இறுவட்டு இந்திய இலங்கை கலைஞர்களின் கூட்டு முயற்சியாக வெளி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.




## பேரருட்திரு கலாநிதி பொன்னையா யோசப் அவர்களின் புதிய நூல் "தனிப்பெரும் தலைமைக்குரு இயேசு"

திருமலை மட்டு நகர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் பேரருட்திரு கலாநிதி பொன்னையா யோசப் அவர்களின் நூல் வெளியீடுகளில் நான்காவதாக மலர்ந்துள்ளது 'தனிப்பெரும் தலைமைக்குரு இயேசு' எனும் பெயர்கொண்ட நூல். "திருத்தூதர் பணி விளக்கவுரை, புனித நாட்டுப்பயணம், பவுலின் ஆத்ம ராகங்கள் எனும் மூன்று நூல்களை வெளிக்கொணர்ந்துள்ள ஆயர் அவர்களின் "குருக்களுக்கான ஆண்டு" வெளியீடாக மேற்கூறிய நூல் மலர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. புதிய ஏற்பாட்டின் குருத்துவம் பற்றியும் அதன் பின்னணி பற்றியும், எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமடலை விளக்கி 106 பக்கங்களாக விரிந்துள்ள இந்நூல் ஒன்றின் விலை ரூ 140 மட்டுமே. திருமலை மட்டு மறைமாநில துணை ஆயரின் மேய்ப்புப்பணியுடன் எழுத்துப்பணியும் மென்மேலும் சிறந்தோங்க மன்னா வாழ்த்துகின்றது.






### யோசேப்பின்அழகான அங்கி

சிறுவர் பொழிவில் பிரசுரமான நிறமற்ற படத்திற்கு கலைநயத்தோடு நிறந்தீட்டி அனுப்பியவர்

ஜெ. ஷெனோவி,
395/39, யோசப்வாஸ் வீதி,
இறம்பைக்குளம்,
வவுனியா.

பாராட்டுக்குரியவர்
பெ. பேடின் பெனோ
சின்னக்கடை, மன்னார்.

## கொஞ்சம் சிரிங்க

**பேச்சாளர் :** உறவுக்கு கை கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம்
**கூட்டத்தில் ஒருவர் :** அவசரத்திற்கு கடன் கொடுப்பீர்களா?

**மனைவி :** அதோ சுவரோரமாக பாம்பு போகுது. பாத்துக்கிட்டு அடிக்காம இருக்கிறீங்க?
**கணவன் :** சும்மா இருடி அது பக்கத்து வீட்டுக்குத்தான் போகுது!

**மனைவி :** என்னங்க உங்க கைக் கடிகாரம் ஓடல நின்று போய் இருக்கு
**கணவன் :** நேரத்தை வீணாக்கக் கூடாதுண்ணுதான் நிறுத்தி வைச்சேன்.

**நண்பன் :** அரசு! இத்தனை நாளா குடிக்காத நீ இன்டைக்கு ஏன் குடிக்கிறாய்?
**அரசு :** எல்லோரும் இன்டைக்கு குடி அரசு! குடி அரசு என்று சொன்னாங்க அதனால்தான்.

அ. வேஜின் நிலானி, ஆவணம், நானாட்டான்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் பிரதான வீதி 17ம் இலக்கத்திலுள்ள கறிற்றாஸ் – வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.